SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது விபர்த்தம் "

74-ம் புத்தகம் 48-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு மார்கழி மாசம் 8-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பரலோகத்திலிருந்து கொண்டுவந்த மலர்களும், கனிகளும்

"உனதுதெய்வீக பத்தாவின் நந்தவனத்திலிருந்து எனக்குச் சில பழங்களும், ரோசாப்பூக்களும் அனுப்பிவை" என்றான் தெயோபிலுஸ், தலைவெட்டப்படுவதற்காக அழைத்துச்செல்லப்பட்ட தொரோத்தேயம்மாளைப் பார்த்து. அவளைக் கேலிபண்ணும்தோரணையில் அவ்வாறு சொன்னான் அவ்வாலிபன். தொரோத்தேயம்மாள் இளம்பிராயமுள்ளபெண். கிறீஸ்துவேதத்தை மறுதலிக்கச்செய்வதற்காக அவள்மீது அதிகாரிகள் எடுத்தநடவடிக்கைகளைப் பார்ப்பதற்காகக் கூடியிருந்த ஏராளமான நகர்வாசிகளுள் தெயோபிலுஸ் என்பவனும் ஒருவன். "அழகிற்சிறந்த இந்தப்பெண்மணி இந்தப்பாழும் அந்நியவேதத்தில் விழுந்திராவிட்டால் நான் இவளைமணந்திருக்கலாமே" என்று அங்கலாய்த்த வாலிபர்களில் இவனும் ஒருவனாயிருத்தல்கூடும். எல்லாம் முடிந்துவிட்டது. அவள் எந்தவேதனைக்கும் சித்திரவதைக்கும் அஞ்சாமல் "நான்கிறீஸ்துவுக்கே, சொந்தமானவள், அவருடன் ஐக்கியமாகவே காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றுசொல்லிவிட்டாள். அங்குகுழுமியிருந்த வாலிபர்களுக்குப்பரிதாபம் ஒருபக்கமென்றால், ஆத்திரம் மறுபக்கம் பொங்கியது. முணுமுணுவென்று பலபேர்பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்தனர். தெயோபிலுஸோவெனில் மேற்கூறியவாறு உரத்தசத்தமாகக் கூறினான்.

"தாங்கள்கோரியவாறே அனுப்பிவைக்கிறேன்" என்று விடையளித்தாள் தொரோத்தேயம்மாள்.

கொலைஞன் அவளுடைய கழுத்தை வெட்டுவதற்குமுன் அவள்தரையில் முழந்தாட்படியிட்டுச் செபிக்கிறாள். உடனே அங்குதிடீரென ஒருகுழந்தை தோன்றுகிறது. பூக்களோ, பழங்களோ பார்க்கமுடியாத காலமாகிய அந்தமாசிமாதத்தில் அந்தக்குழந்தை பார்ப்பவர்களின் வாயில் சலம்ஊறத்தக்க வகையில் அமைந்திருந்த மூன்று கனிகளையும், அன்றுமலர்ந்த அழகிய ரோசாப்புஷ்பங்களையும் வைத்திருந்தான். அக்குழந்தை நேராகத் தெயோபிலுஸ் இருந்த இடத்தையணுகி "தொரோத்தேயம்மாள் உங்களுக்குக் கொடுப்பது" என்றுசொல்லி அவற்றை அவ்வாலிபனிடம் சமர்ப்பித்தான். தெயோபிலுசும் "ஆ! யேசுக்கிறீஸ்துவே உண்மையான தெய்வம்" என்று கத்தினான். தொரோத்தேயம்மாள் தலைவெட்டப்பெற்றுப் பத்து அல்லது பன்னிரண்டுமணிநேரம்ஆவதற்குள் தெயோபிலுசும் வேதசாட்சியாக மரித்தார்.

தொரோத்தேயம்மாள்ரோமைச் சாம்பிராச்சியத்தின் ஒருபகுதியாகிய கப்பதோஸியாவில் செசாரெயாநகரில் பிரபுவம்சத்தில் பிறந்தவள். இவள்கிறீஸ்துவபுண்ணியங்களிற்சிறந்துவிளங்கிவந்ததால் இவளைப்பற்றியசெய்திகள் வெகுசீக்கிரத்தில் அதிகாரிகளின் செவிக்கெட்டின. இவள் கைதுசெய்யப்பட்டு நீதிபதிமுன் கொண்டுவரப்பட்டாள்.

நமதுதேவர்களுக்குப் பலியிட வேண்டுமென்று கட்டளையிட்டோமே; நீஏன் அக்கட்டளையை மீறினாய்?

"ஏகதேவனாகிய மெய்யான தேவனைமட்டுமே நான் ஆராதிக்கிறேன்"

"நான் சொல்வதைக்கேள்: நமதுதேவர்களுக்குப் பலியிடு. நீ மரப்பரியில்* ஏறாமல் தப்பிப்பதற்கு அதுவொன்றே வழி.

"மரப்பரியின் வேதனைகள் கொஞ்சநேரமே நீடிக்கமுடியும். அவற்றால்நான் நித்தியவேதனைகளைத் தவிர்ப்பேன்."

நீதிபதி பயமுறுத்துவதற்காக மரப்பரியின்மீது அவளைக்கிடத்துமாறு கட்டளையிட்டான். சேவகர்கள் அவளைமரப்பரியில் கிடத்தியபோதிலும் அதிலுள்ள வதைக்கும்கருவிகள் இயங்காமல்இருப்பதைக்கண்ட தொரோத்தேயம்மாள் "ஏன் தாமதப்படுகிறீர்கள்? நான்கிறீஸ்துவள். நான் யாருக்காக இந்தவேதனைகளையும், மரணத்தையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுகிறேனோ அவரைப்பார்க்க ஆவலாய் இருக்கின்றேன்" என்றாள்.

"நீபார்க்கவிரும்புவது யார்?"

"தேவனின்குமாரனை கிறீஸ்து."

"இந்தமூடப்பேச்சுகளை விட்டொழி. நமது தேவர்களுக்குப் பலியிடு. நீ சந்தோஷமாகவாழ்ந்திருப்பாய்."

"பொய்த்தேவர்களுக்கு நான் ஒருபொழுதும் பலியிடேன். நான் கிறீஸ்துவின்பத்தினி. மோட்சலோகத்தில் அவருடன் ஐக்கியமாக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறேன்."

இத்தருணத்தில் நீதிபதிக்கு ஒருயுக்தி தோன்றுகின்றது. மரணத்திற்குப்பயந்து சமீபத்தில் கிறீஸ்துவேதத்தை விட்டுவிட்ட இரண்டுநிர்ப்பாக்கிய ஸ்திரிகளிடம்தொரோத்தேயம்மாளை ஒப்படைக்கிறான். இவர்கள் அவளுடைய விசுவாசத்தைக் குலைக்கப் பல்வகையிலும் முயலுகின்றனர். அவளோ எதற்கும் அசையவில்லை. விசுவாசத்தில் அதிகஸ்திரமாக ஊன்றிநின்று இந்தஇருபெண்பிள்ளைகள்செய்த துரோகத்தின் ஈனத்தன்மையை அவர்கள்உணரச்செய்தாள். அவர்கள் மிகமனஸ்தாபப்பட்டு மீண்டும் திருச்சபையில் சேர்ந்தனர். இச்செய்தியைக் கேட்ட நீதிபதி கோபாவேசங்கொண்டு அவ்விருவரையும் சிரச்சேதம் செய்வித்தான்.

தொரோத்தேயம்மாளை மீண்டும்கொண்டுவந்து மரப்பரியில் கிடத்தினர். அதிலிருந்த வேதனைக்கருவிகள் ஒவ்வொன்றாக இயக்கப்பட்டன. அவளோ "நான் என்வாழ்நாளில் இன்றைக்கிருப்பதுபோல் அவ்வளவு சந்தோஷமாக வேறெந்தநாளிலும் இருந்ததில்லை. ஏனெனில், பிசாசுகளால் கைப்பற்றப்பட்ட இரண்டுஆத்துமங்களை இன்று கிறீஸ்துநாதரிடம் கொண்டுவந்துசேர்த்தேன்" என்று தனது வேதனைகளின்நடுவே கூறுவாளாயினள்.

இறுதியில்சேவகர்கள் அவளை வாளால்வெட்டிக் கொன்றனர். 'யேசுவே என்னைஉமதுமோட்சலோக நந்தவனத்திற்கு அழைத்துக்கொண்டதற்காக நன்றிசெலுத்துகிறேன்" என்று கூறியவண்ணம்உயிரைவிட்டாள்.

(*'மரப்பரி' அல்லது 'மரக்குதிரை' என்பது பூர்வீகரோமையர் பெரிய குற்றவாளிகளை வதைப்பதற்கு உபயோகித்துவந்த பலவித சித்திரவதைக் கருவிகளுள்ஒன்று. முதல் மூன்று நூற்றாண்டுகளில் ரோமைஇராச்சியத்தில் கிறீஸ்துவேதத்தை அழிப்பதற்கு முயற்சிகள் எடுத்துவரப்பட்டபோது கிறீஸ்தவர்களை இம்சிப்பதற்கு இந்தக் கருவிகளெல்லாம் உபயோகிக்கப்பட்டுவந்தன. மற்றும்பல கிறீஸ்தவர்கள் துஷ்டமிருகங்களுக்குஇரையாயினர்.)

### ஆகமனகாலத்தின் 3-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(அரு. 1: 19—23)

அக்காலத்தில் யூதர் எருசலேம்நகரிலிருந்து ஆசாரியர்களையும், இலேவியர்களையும் அருளப்பரிடம்அனுப்பி நீர்யாரென்று வினவும்போது அவர் உள்ளதை மறைக்காமல் ஒப்புக்கொண்டு நான் கிறீஸ்துஅல்லன் என்று வெளிப்படுத்தினார். மீளவும்அவர்கள்: பின்னுமென்ன? நீர் எலியாசென்பவரோ என்று அவரைக்கேட்டார்கள். அதற்கும்நான் அல்லன்என்றார். நீர்தீர்க்கதரிசியோ? என்றதற்கும் அல்லன்என்று மறுமொழிசொன்னார். ஆகையால் அவர்கள்: எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள்மறுமொழி தரும்படியாக நீர்யார்? உம்மைக் குறித்து என்னசொல்லுகிறீர்? என்று அவரைக்கேட்டார்கள். அதற்குஅவர்: தீர்க்கதரிசியாகிய இசையாசென்பவர் வசனித்தபடியே ஆண்டவருடைய வழியைச் செவ்வைப்படுத்துங்கள் என்று வனாந்தரத்திற் கூறுகிறவனுடைய குரலொலி நானே என்றார். அனுப்பப்பட்டவர்களில்சிலர் பரிசேயராயிருந்தார்கள். மீளவும்அவர்கள் அவரை வினவி: நீர்கிறீஸ்துவுமல்ல, எலியாசென்பவருமல்ல, தீர்க்கதரிசியும்அல்லவென்றால் பின்னைஎன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்றார்கள். அருளப்பர் அவர்களுக்கு மறுமொழியாக வசனித்ததாவது: நான் சலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; ஆனால், நீங்கள் அறியாதஒருவர் உங்கள்மத்தியில்நிற்கிறார். எனக்குப்பின் வரவிருக்கிறவரும் என்னிலும் மேம்பட்டவரும் அவர்தான். அவருடைய பாதரட்சையின்வாரை அவிழ்க்க நான் பேறுபெற்றவனல்ல என்றார். இவைகள் பெத்தானியாவில் யார்தான்நதிக்கப்பால் சம்பவித்தன. அவ்விடத்தில் அருளப்பர் ஞானஸ்நானங்கொடுத்துக்கொண்டிருந்தார்.

கிறீஸ்துவே உமக்குப்புகழ் உண்டாவதாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதசாட்சிகள் ஆக்கமாட்டோம்

"சீனுவிலே ஓர்தேசீய கத்தோலிக்க திருச்சபையை ஸ்தாபிக்கச் சீனக்கம்யூனிஸ்தர்கள் ஆசிப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனல், தங்கள்கையிலே ஓர்கருவியாக உபயோகிக்கக்கூடிய ஓர்குருவானவரையோ அன்றேல் மேற்றிராணியாரையோ அவர்கள் இதுவரை கண்டுகொள்ளவில்லை" என்று சீனதேச நான்கின்நகர் அதிமேற்றிராணியாரான யுபின்ஆண்டவர் கூறுகின்றார். "பீப்பிங்நகரிலே கம்யூனிஸ்த அரசாங்கத்தைத் தெரிவுசெய்த ஆலோசனைமகாநாட்டில் புரொட்டெஸ்தாந்தரும், புத்தரும், முஸ்லீம்களும் பிரதிநிதிகளாகச் சென்று கலந்துகொண்டபோதிலும் திருச்சபைப்பிரதிநிதியாக எவருமே சென்று அதில்பங்குபற்றவில்லை; மஞ்சூரியாவைச்சேர்ந்த செப்பிங்காய்நகர் மேற்றிராணியாரும், 69 வயசுடையவருமான லேப்பியேர்ஆண்டவர் ஓர் ரொட்டிச்சாலையைத் தானேகொண்டு நடத்திவருகிறார். ஹோப்பேமாகாணத்து சுங்வோநகரின் 65 வயசுடையவரான லாய்ங்மேற்றிராணியார் தெருக்களைப் பெருக்கிவருகின்றார். இப்படிச் செய்வதெல்லாம் எதற்கெனில், ஒவ்வொருவரும் ஏதோ ஒருபயன்தரும் வேலையைச் செய்யவேண்டுமென்று கம்யூனிஸ்தர்கள் வேண்டிநிற்பதே" என்றும் அவர்கூறுகின்றார். ஆயின் சமீபகாலத்திலே சீனுவில் பெரும் இரத்தப்பிரவாகத்துக்குரிய வேதகலாபனைஒன்று நடைபெறுமென்று அவர் எண்ணுவோராயில்லை. ஓர்பட்டணத்தில் கம்யூனிஸ்தஅதிகாரிஒருவன் கத்தோலிக்கருடன் பேசியபோது: "வேதசாட்சிகள்ஆவதற்கு உங்களை அநுமதிக்கமாட்டோம்; வேதசாட்சிகளின்இரத்தம் திருச்சபையின் வித்து என்று ஓர்பழமொழியை நீங்கள்கொண்டிருப்பதை அறிவோம்; உங்களை வேதசாட்சிகளாக்க மாட்டேம், ஆனல், வேதத்தை மறுதலிக்கும்படியே செய்வோம்" எனக்கூறினன்.

### கத். அரசியற் தலைவர்கள்

பிரான்ஸ்தேசத்தின் பிரதமமந்திரியாராக எம். ஜோர்ஜெஸ் பிதோ அவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றதுடன் இரும்புத்திரைநாடுகளுக்கு மேற்கேயுள்ள அதிகமான ஐரோப்பியஅரசாங்கங்களின் தலைவர்களாகக் கத்தோலிக்கரே இருந்துவருகின்றார்கள். அவர்களின்நாமங்கள் வருமாறு:

பிரான்ஸ்—ஜோர்ஜெஸ் பிதோ, பிரதமமந்திரியார். றுபேட் ஷூமன், வெளிநாட்டுமந்திரியார்.

பெல்ஜியம்—காஸ்ரன் அயிஸ்கென்ஸ், பிரதமமந்திரியார்.

ஜேர்மனி—டக்றர் கொன்ருட் அடேனுவர், சான்ஸலர்.

ஆஸ்திரியா—டக்றர் லெயோபோல்ட் பிகில், சான்ஸலர்.

அயர்லாந்து—ஜோண் ஏ. கோஸ்ரெல்லோ, பிரதமமந்திரியார்.

இத்தாலி—ஆல்சிதே தே காஸ்பெறி பிரதமமந்திரியார்.

லக்செம்போர்க்—பியேர் துய்ப்போங், பிரதமமந்திரியார்.

நெதர்லாந்து—ஜே. ஆர். எச். லாண்ஷாய்க், உதவிப் பிரதமமந்திரியார்.

போர்த்துக்கால்—மாஷல் அன்ரோனியோ கார்மோனு, பிரசாதிபதி. டக்றர் அன்ரோனியே சலாசர், பிரதமமந்திரியார்.

ஸ்பெயின்—ஜெனறல் பிரான்சீஸ்கோ பிறுங்கோ, அரசாங்க தலைவர்.

ஆஸ்திறேலியா—யோசெவ் சிவ்ளி, பிரதமமந்திரியார்.

கனடா—லூயிஸ் செண்லோறண்ஸ், பிரதமமந்திரியார்.

### பிறுங்கோவும் பத்திமாவும்

ஸ்பானியதேச அரசாங்கதலைவரான ஜெனறல் பிறுங்கோஅவர்கள் சமீபத்திலே போர்த்துக்காலுக்கு விஜயஞ்செய்திருந்தபோது, அவரும் அவர்பாரியாரும் பத்திமாதிருக்ஷேத்திரஞ் சென்று தரிசனைச்சிற்றாலயத்தில் திவ்விய பூசைகண்டார்கள். லெய்றியாவின் மேற்றிராணியாரான மகாவந். கொறேயா-டா சில்வாஆண்டவர் பாடற்பூசை நிறைவேற்றினர். அச்சிறிய கோவிலுக்கு வெளியேநின்று குருத்துவமாணவர்குழாம் சங்கீதம் பாடியது. பூசையின்பின்னர் பிறுங்கோ அவர்கள் அங்கேமாதாவின் காட்சிகள் அருளப்பெற்ற மூன்றுபிள்ளைகளில் யாசிந்தா, பிரான்சிஸ்கோஎனும் இருவரினதும் தந்தையான மனுவேல் மாட்ரோ என்பவருடன் சம்பாஷிக்க அனுமதி கோரினுர். இவ்விருபிள்ளைகளும் காட்சிகள் அருளப்பெற்றசிறிதுகாலத்தின்பின் இறந்துபோயினர். ஜெனறல் பிறுங்கோவுக்கும், திரு. மாட்ரோவுக்குமிடையே சம்பாஷணைகள் நிகழ்ந்தபின்னர் ஸ்பானியதலைவர், டா சில்வா மேற்றிராணியாரால் விருந்திட்டு உபசரிக்கப்பெற்றனர். அதன்மேல்அவர் மேற்றிராணியாருக்கு பென்ஞபோட், ஆர்ச். றேய்மன்டின் மகிமைவரிசையைச் சங்மானித்துப் பத்திமா திருக்ஷேத்திரத்திற்கென்று 250 பவுண்நன்கொடை அளித்தனர்.

### ஆஸ்திரியாவும் கம்யூனிஸமும்

சோவியற்ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள இரும்புத்திரைநாடுகளாலே சூழப்பட்டிருந்தும் ஆஸ்திரியதேசமக்கள் சமீபத்தில்நிகழ்ந்த தேர்தலிலே கம்யூனிஸ்தர்களுக்குப் படுதோல்வியை உண்டுபண்ணிவிட்டிருக்கிறார்கள். தற்போது அங்கே டக்றர் பிகில்எனும் கத்தோலிக்கபிரமுகரைப் பிரதமராகக்கொண்டு ஓர்கூட்டுஅரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இவர்அத்தேசத்திலே கம்யூனிஸத்துக்கு முழுவிரோதியான சனகட்சியின் தலைவராவர். தேர்தலிலே கம்யூனிஸ்தர்களுக்கு நூற்றுக்கு 5 வீதமான வாக்குகளேகிடைத்தன. சூழவரவுள்ள நாடுகளிலே கம்யூனிஸ்த பயங்கரவாதிகள், யுத்தபயப்பிராந்திகள், அச்சுறுத்தல்கள் மும்முரமாகவிருந்தும் ஆஸ்திரியமக்கள் அவற்றிற்கெல்லாம் அஞ்சாது கம்யூனிஸ்தர்களைத் தோற்கடித்தமை பாராட்டத்தக்கதாகும்.

### கருதினல் மார்மஜிஆண்டவர்

சென்ற கார்த்திகைமாசம் 3-ந்திகதியன்று 73-ம்வயசிலே கருதினல் மார்மஜிஆண்டவரின் மரணமானது, திருச்சபைக் கருதினல்மார்தொகையை 54 பேராகக்குறைத்து, கருதினல்மார் திருச்சங்கத்திலே 16 ஸ்தானங்களைக் காலியாக்கிவிட்டிருக்கிறது. தற்போது அச்சங்கத்திலே இத்தாலியசாதியினராய் 20 பேரும், பிறசாதியினராய் 34 பேரும் இருக்கின்றார்கள். காலஞ்சென்ற கருதினல்ஆண்டவர் திருச்சபைச்சங்க திருச்சங்க தலைவராய் விளங்கியிருந்து வறியவர்கள்மட்டில் காண்பித்துவந்த பற்றுதல்காரணமாக ரோமாபுரியெங்கும் நன்கறியப்பெற்றிருந்தார். இவ்வருடத்திலே காலஞ்சென்ற இரண்டாவது கருதினல்இவர். சென்றஆனிமாசத்திலே பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் சூகாஆண்டவர் காலஞ்செல்லலாயினர்.

### ஒருமாதசெபமும் தியாகமும்

ஆர்ஜென்ரீனுவிலே கோட்டோவா மேற்றிராசன கத்தோலிக்க மக்கள் சென்ற ஐப்பசிமாசத்தைத் துன்புறுத்தப்படும் கத்தோலிக்கருக்கும், அவர்களைத் துன்புறுத்துவோருக்குமான ஓர்செபத்தினதும், பரித்தியாகத்தினதும் மாதமாக அனுஷ்டித்தார்கள். அம்மாசத்திலே குடும்பங்கள் தினமும் செபமாலை ஓதின. பெண்மணிகள் தங்களை அழகுபடுத்துவதையும், படக்காட்சிகள் பார்க்கப்போவதையும் நிறுத்திக்கொண்டார்கள். ஆடவர்கள் சுருட்டுப்புகைப்பதை நிறுத்திவிட்டார்கள். பிள்ளைகள் இனிப்புப்பண்டங்கள் தின்பதையும், படக்காட்சிகளுக்குப் போவதையும் நிறுத்திக்கொண்டார்கள். அம்மேற்றிராசனகத்தோலிக்கசேவாசங்கம் துன்புறுத்தப்படும் நாடுகளுக்குப் பாப்பரசர் உதவிசெய்யும்படியாகப் பணம் சேகரித்துவரலாயிற்று.


## நல்லாயன்

(சிறந்த கத்தோலிக்க மாதவெளியீடு)

ஆசிரியர்: சுவாமி ஆ. ஜோ. அடைக்கலம்

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

### கிறிஸ்மஸ் விசேஷ ஆண்டுமலர்

மார்கழிஇதழ் கிறிஸ்மஸ்விழாவை யொட்டி 130 பக்கங்களுக்குமேல் பிரபல அரசியல்தலைவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்களின் கட்டுரைகளுடனும், ஏராளமான கதைகள், கவிதைகளுடனும் வெளிவருகின்றது. இதழ்முழுவதையும் அழகிய இருவர்ணச் சித்திரங்கள் அலங்கரிக்கும்.

அட்டைப்படமும் மூவர்ணத்தில் துலங்கும்.

தனிப்பிரதி சதம் 60 தான்..

சந்தாதாராகச் சேரப்பிரியமுள்ளவர்கள் எழுதவும். சொற்பபிரதிகளே வருவதால், முன்கூட்டிப் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

JOHN D' CRUZ,
Post Box. 377
COLOMBO.


### திருக்கல்லறைக் கோவில்

நமது திவ்விய இரட்சகர் சிலுவையில் அறையப்பெற்று மரித்தஸ்தலம், அவருடைய திருச்சடலம் மூன்று தினங்களாக அடக்கம்பண்ணப் பெற்றிருந்த கல்லறைமுதலிய புனிதக்ஷேத்திரங்களைத் தன்னகத்தேகொண்டுள்ள திருக்கல்லறைக்கோயில் மேற்குப் பகுதியின் வில்மச்சுமாடத்திலுள்ள மரஉத்தரங்களில் சென்றகார்த்திகை 23-ந்திகதிஇரவு தீப்பிடித்தது. உத்தரங்களைச் செப்பனிட்டுக்கொண்டிருந்த தொழிலாளர் உபயோகித்துவந்த திராவக ஊதுகுழலைச் (Oxy-acetylene blow-pipe) சரியானவிதமாகப் பிரயோகிக்கத் தவறியதால் தீப்பிடித்ததாகத் தெரிகிறது. மாடத்திலிருந்த மரஉத்தரங்களில் மூன்றில் இருபாகம் தீக்கிரையாகிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. விடியற்காலை இரண்டு மணிக்குள் நெருப்புஅணைக்கும் பகுதியினர் தீயைச்சமாளித்து ஆலயத்தின் ஏனையபாகங்களுக்குத் தீ பரவவிடாமல் தடுத்தனர். திருக்கல்லறைக்கோயில் பழையஜெருசலேம் நகரில், தற்பொழுது அராபியர் வசத்திலிருக்கும் பகுதியில்இருக்கிறது. இது பலசிறிய கோயில்களை உள்ளடக்கியிருக்கும் பிரமாண்டமான ஆலயம். திவ்வியகர்த்தர் சிலுவையில் அறையப்பெற்ற கல்வாரிமலை, திருக்கல்லறை, அவரைச் சிலுவையில் கிடத்தி ஆணி அறைந்தவிடம் முதலிய புனிதஸ்தலங்களெல்லாம் இந்தப் பிரமாண்டமான ஆலயத்திற்குள் இருக்கின்றன. அரிமத்தியாசூசையப்பரும், நிக்கொதேமுஸூம் ஆண்டவரின் திருச்சடலத்தைக் கிடத்திப் பரிமளவர்க்கங்களுடனே பரிவட்டத்தால் சுற்றிக்கட்டி அடக்கத்துக்கு ஆயத்தப்படுத்தின செந்நிறக்கல், ஆண்டவர் உயிர்த்ததை மரியமதலேனுளுக்குத் தெரிவித்த சம்மனசு உட்கார்ந்திருந்த கல்லின் ஒருபாகம், ஆண்டவரைக்கட்டிக் கசைகளால்அடித்த கற்றூணின் ஒருபாகம்முதலிய புனிதவஸ்துக்களும் இந்தஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

❀ கத்தோலிக்க சேவா திட்டம் ஒன்றின்கீழ் கமக்காரருக்கு உதவிசெய்வதற்கென்று பிறேசில் நாட்டுக்கிராமங்களிலுள்ள குருமார் நிலபரிபாலனம், வனபரிபாலனம், கமத்தொழில் சம்பந்தமான அதிகம்பிந்திய புதுமுறைகள் ஆதியவற்றில் பயிற்சியடைந்துவருகிறார்கள்.

❀ ஜெருசலேம் நகரிலுள்ள திவ்விய கர்த்தரின் திருக்கல்லறைக் கோவிலின் மேற்குப்பகுதியிலுள்ள மத்திய டோமில் தீப்பற்றிக்கொண்டதாகவும், அந்தத் தீ பிறவிடங்களிலும் பரவாது தடுத்துவிடப்பட்டதென்றும் தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

### சுதேச வைத்தியசங்கம்

வவுனியா

வவுனியா, C. M. S. பாடசாலையில் 28-11-49 திங்கட்கிழமை சாயந்தரம் 5 மணியளவில் ஆயுர்வேத டக்றர். சி. அ. அம்பலவாணர் எட்வின்நோயெல் அவர்கள்தலைமையில் வைத்தியசங்க கூட்டம் ஒன்று நடைபெற்றபோது, வைத்தியர்களைப் பதிவுசெய்யும்விஷயம் கவனிக்கப்பட்டு, வைத்தியமுன்னேற்றத்திற்குவேண்டிய கல்விசம்பந்தமாய்ப் பலஉதவிகள்அளிக்க ஒழுங்குசெய்யப்பட்டது. வவுனியாப்பகுதிக்கு உபதலைவராக வைத்தியர் P. வேலுப்பிள்ளை அவர்களும், காரியதரிசியாக வைத்தியர் A. ஸ்றன்னிலாஸ் அவர்களும், தனதிகாரியாக வைத்தியர் V. சிவசேகரம்அவர்களும் நியமனம் செய்யப்பெற்றார்கள். வைத்தியகல்வி முயற்சிக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. பின் பலபேச்சாளர்களும் சொற்பொழிவுகள் ஆற்றினர். பிரபலவைத்தியர் சி. கோதண்டர்அவர்கள் கூட்டத்தை விமரிசையாக முடித்துவைத்தனர். இக்கூட்டம் வைத்தியர் P. வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் மாசம் ஒருமுறை கூட்டப்பெறும்.

—நிருபர்.

### மாஜி பிரதமரின் எச்சரிக்கை

முன்னர் ருஷியாவின் பிரதமராயிருந்த அலெக்சாண்டர் கெறென்ஸ்கி அவர்கள் தமது பிரதமர்பதவியை இழந்து 32 வருடங்களின்பின் முதன்முறையாகச் சென்ற 27-ந் திகதி ருஷியாவுக்கு ஆகாயவசனி மூலம் அனுப்பிய செய்தியிலே: சோவியற் கம்யூனிஸ்தர்கள் நெருப்புடன் விளையாடிக்கொண்டிருப்பதாக அவர்களை எச்சரிக்கலாயினர். "இந்த அக்கினி பற்றிப்பரவுமானல், உள்ளபடியே நாரீக உலகமுழுவதும்அல்ல, ஆனல் ருஷியா முழுவதும்எரிந்தேதீரும்" என்று அவர் கூறி உலகத்தை ஆக்கிரமிக்கும் நோக்கமாகச் சர்வதேசகம்மியூனிஸம் ருஷியாவின் பலபாகங்களையும், வளங்களையும் பிரயோகிப்பதாக அவர் குற்றம் பாரித்தனர். இவருக்குத் தற்போது வயசு 68. பொல்ஷெவிக்கர்கள் ருஷியாவில் அதிகாரத்தைக்கைப்பற்றுமுன் இவரே அதன்பிரதமராக 100 நாள் கடமை பார்த்தவர். அதுமுதல் இவர் பிரித்தானியிலும், பிரான்சிலும், அமெரிக்கஐக்கியதேசத்திலும் சஞ்சரித்து இவ்வருட ஆரம்பத்திலே ருஷிய மக்களின் விடுதலைக்காக ஐக்கியசபை ஒன்றைவேறு 24 பேருடன் நியூயோக் நகரில் ஸ்தாபிக்கலாயினர்.

❀ திரு. யெவ்வேர்ஸன் கவ்வெறி அவர்கள் எகிப்திய அரசினிடமாக அமெரிக்க ஐக்கியதேச ஸ்தானீகராக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இவருடன் எகிப்திலே பல அரசுகளினதும் ஸ்தானீகர்களானகத்தேலிக்க பிரமுகர்களாய்ப் பதின்மர் இருந்துவருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் இயேசு

நெல்வேலிகளால் சூழப்பட்டுள்ள திருநெல்வேலியின்கண் நேசமணி என்று ஒருவிதவைஇருந்தாள். இயற்கைஎழிலும், செயற்கைச்செல்வமும் படைத்துள்ள அவளுக்குக் கணவனில்லாக் குறையேதவிர வேறொரு கவலையுமே இல்லை. தனதுகணவனை இழந்த நேசமணியம்மாள் சிறிதுகாலம் தன் வாலிபத்துடுக்கை அடக்கிஒடுக்கி ஆண்டவருக்குத் தன்னைஅடியாளாக்கி அனுதினமும் சற்பிரசாதநேசரை உட்கொண்டு தன்காலத்தைக் கழித்து வருங்கால், சிலதுஷ்டப்பெண்களின் சிநேகத்தால் தான்அனுதினம் அனுசரித்துவந்த கடமைகளை எல்லாம் மறந்து, அதற்குமாறாகத் தினமும் சினிமா, நாடகம்முதலிய வேடிக்கைகளிலே ஈடுபட ஆரம்பித்தாள்.

அவள்செல்வந்தர்வீட்டுப்பெண்ணானபடியாலும், அவ்வளவு செல்வத்திற்கும் அவளே சர்வாதிகாரியாக இருந்ததாலும், அவளைத் தட்டிக்கேட்க ஒருவரும் இல்லாததாலும் விருந்தாளிகள் அவள்வீட்டிற்குநெய்க்குடத்துஎறும்புபோல் வந்துமொய்த்தார்கள். இவ்வாறுகாலங்கழித்த நேசமணியம்மாள் தன்பெருமைநிலைக்க மாபெரும்மனை ஒன்றுகட்டி அதற்கு 'நேசகம்' என்று பெயரிட்டாள். அது நிலத்தின்கீழே இரண்டுமாடிகளும், மேலே இரண்டு மாடிகளும் உடையதாய்இருந்தது. ஆகையால் அப்பெருமனையைப் பார்வையிட அநேகஆடவர்களும், பெண்களும் கும்பல்கும்பலாகவந்து நேசகத்தைப்பற்றிநேசமணியம்மாளிடம் பெருமையாகப்பேசிவிட்டுப் பின்னர்தம்மகம் ஏகுவார்கள். ஆயின் இதுவரை பிற ஆடவர்களிடம் நெருங்கிப் பழகாத நேசமணியம்மாள் தன்வாழ்க்கையில் ஏதோஒருபுத்துயிர் இருப்பதாகநினைந்துத் தன்வீட்டிற்குவரும் ஆடவர்களுக்கும் அவகாசம்கொடுத்து அவர்களோடு இன்பஉரையாடித் தன்காலத்தைப் போக்க முனைந்தாள். ஆகவே, அவள் கோவிலுக்குச்செல்வதை அறவேமறந்துவிட்டாள்.

அவளின்நடத்தையைப்பற்றிக் கேள்விப்பட்ட அவளதுஆத்துமகுரு அவள் போக்கைக்கண்டு வியப்படைந்தார். அவளுக்காக உருக்கமாகச் செபஞ்செய்தார். எப்படியாவது அவளைச் சத்தியமார்க்கத்தின் உத்தமகிறீஸ்தவளாக்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மரியமதலேனாளாகச் செய்துவிடவேண்டுமென உறுதிகொண்டார். அதற்காகத் தமது அனுதினபூசையை ஒப்புக்கொடுத்து மரியமதலேனம்மாளை நோக்கி நவநாளும்தொடக்கினார். இது விஷயமாக மேற்றிராணியாரின்உத்தரவை இரகசியமாகப்பெற்று அவள் ஆத்துமாவிற்காக உழைக்க ஆரம்பித்தார். நூறுஆடுகளில் ஒருஆட்டைக் காணவில்லைஎன்றால் மற்றத் தொண்ணூற்றொன்பதுஆடுகளையும்விட்டுவிட்டு அந்த ஒருஆட்டைத் தேடிப்பிடிக்கச் செல்லும் நல்லாயனைப்போல ஆனந்தங்கொண்டார் அருள்நாதர்சுவாமி.

இரவுசுமார் பத்துமணியிருக்கும். நேசமணியம்மாள் தன்வீட்டில் தனித்திருக்கும்சமையம், படுக்கைக்குச்செல்லும்வேளை திடீரெனஓர்சுந்தரரூபன் — அன்றுதான் சவரஞ்செய்து அழகேஉருவான அற்புதசிலைபோல் அவள் முன்பாகப் புன்முறுவலுடன் தோன்றினான். நேசமணியம்மாள் அவனை எங்கேயோ பார்த்திருப்பதுபோல அவன் குரலிலிருந்து சிறிதுஉணர்ந்தாள். ஆனால், யார்என்று அவளுக்குத்திட்டமாகத் தெரியவில்லை. ஆகவே, "தயவுசெய்து நீர்யார்? சொல்லும்" என்றாள்.

அம்மா! நான் வடதேசத்து அகதிகளில் ஒருவன். தங்கள்பெருமையைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ஆகையால் இன்றிரவு இங்கேதங்கிவிட்டு...என்று கூறுமுன்னரே அவன்எழிலில் மூழ்கியிருந்த நேசமணியம்மாள், "உட்காருங்கள். ரொம்பச்சந்தோஷம் ஒரு நாளென்ன, ஒன்பதுநாள்வேண்டுமானாலும் தங்கிஇருங்களேன். எனக்கு அதைப்பற்றி ஒன்றுமேஇல்லை" என்றாள்.

"அப்படியானால் தங்களுக்கு..."

"ஒருவரும்இல்லை. இப்போதுநானே எனக்கு இராணி."

"ஆனால், நாம் இப்படிப்பேசுவதை வேறுயாரும் கண்டுவிட்டால்?"

"ஒருஆண்மகனா யிருந்துகொண்டும் இப்படிப்பயப்படலாமா! வேணுமானால் நிலஅறைக்குப் போய்விடுவோமே" என்று கூறிக்கொண்டு அந்தஅறையைப் போயடைந்தார்கள். சிறிதுஒளியுள்ள விளக்கொன்றை ஏற்றிவிட்டு "இப்பொழுது நம்முடையகுரல் ஒருவருக்கும் கேட்காது...எவரும் நம்மைப்பார்க்கமுடியாதுஅல்லவா" என்றாள்.

"ஆம், மனிதர்கள்எவராலும் பார்க்கமுடியாது... ஆனால்"

"என்ன ஆனால்? வேறுயார்தான் நம்மைப் பார்க்கமுடியும்?"

உடனே அவ்வாலிபர் தம்மிடமிருந்த பாடுபட்டசுரூபத்தை எடுத்துக்காட்டி, மன்னுயிர்க்காகத் தன்னுயிரைத்தந்த நமதுஇரட்சகருக்குமா தெரியாது? அவருக்கு இருளும்ஒளியும், காடும்வீடும், மாடியும்குடிசையும்ஒன்றுதான். இருளில்இயேசு இல்லைஎன்று நினைத்தீர்களா! நரகத்தில்முதற்கொண்டு அவர்இருக்கிறார். ஆதாம், ஏவைசெய்த பாவத்திற்காக மனுக்குலம்முழுவதுமே இழந்துபோன மோட்சஇராச்சியத்தை அடைந்துதரவந்தஅவர் இவ்வுலகில் என்னநடந்தாலும் அறிவார்" என்று பாடுபட்டசுரூபத்தை அவளிடம் நீட்டினார்.

இதைக்கேட்ட நேசமணியம்மாள் திகிலடைந்து பேசநாவெழாமல் கற்சிலைபோன்று அசையாமல் நின்று மிரளமிரள விழித்தாள். அதற்குமேல் அவளால்பேசமுடியவில்லை. பாடுபட்ட திருச்சுரூபத்தைக் கையில் பிடித்துக்கொண்டு உள்ளம்பதற, கண்கள் கலக்கமுற, அழுதவண்ணம் "ஐயா தாங்கள்யார்? என்னைப்பாவஇருளில்நின்று ஞானஒளிக்குக் கொணர்ந்து பாதுகாக்கவந்த என்காவற்சம்மனசுதானா? தங்களுக்குயான் என்னகைமாறு செய்யப்போகிறேன்" என்று புலம்பியழுதாள்.

அப்போது அந்தவாலிபர்: "நேசமணி! நான்தான் உனதுஆத்துமகுருவான அருள்நாதர். உனதுசீவிய மாறுதலைக் கேள்விப்பட்டவுடனே மனம் சகிக்கமாட்டாது உன்னைஎந்தவிதமும் திருத்தஞ்செய்யஎண்ணி இக்கோலம் பூண்டு இங்குவந்தேன். நீமனந்திரும்பியதேபோதும்; நான்போய்வருகிறேன். இன்றுமுதல் நீ உத்தம கிறீஸ்தவளாக நட" என்று ஆசிகூறிச் சென்றார்.

மறுதினமே நேசமணி கோவில் சென்று வருஷப் பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்வியநற்கருணைஉட்கொண்டு இருளிலிருந்து தன்னை இரட்சித்த யேசுவுக்கு நன்றியறிந்ததோத்திரம் செலுத்தினாள்.

(ச. போ.)

## விசேஷ றெயின்வண்டிகள்

அடுத்துவரும் கிறிஸ்மஸ் விடுமுறைநாட்களிலே கொழும்புக்கும், காங்கேசன்துறைக்குமிடையில் இரு விசேஷ றெயின்வண்டிகளை ஓடவைக்க றெயில்வேஅதிகாரிகள் ஒழுங்குபண்ணியிருக்கின்றனர். இவற்றில் ஒன்று, இம்மாதம் 23-ந் திகதி இரவு 9.05 மணிக்குக் கொழும்புக் கோட்டைஸ்ரேஷனிலிருந்து புறப்பட்டு மறுநாட்காலை 8.30 மணிக்குக் காங்கேசன்துறை வந்துசேரும். மற்றது, தைமாதம் 3-ந் திகதி பிற்பகல் 3.50 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு மறுநாட்காலை 5.05 மணிக்குக் கொழும்புக் கோட்டைஸ்ரேஷனை போய்ச்சேரும்.

## மரியாயின் சேனை

### 5-ம் அதிகாரம்

(முன்தொடர்ச்சி)

நமது பரிசுத்ததேவதாயும் இதையே நமக்குப் படிப்பிக்கிறாள். நமது இரட்சணியஅலுவலில் அவள்மிகவும் விழிப்பாய்இருக்கிறாள். திவ்வியபாலனைப் பெத்லேகமில் யாதாமோர் வியாகுலமுமின்றிப் பெற்றெடுத்த அந்த இரக்கமுள்ளதாய், கல்வாரிமலையிலே சிலுவையடியில் மனுக்குலத்தைத் தமதுபிள்ளைகளாய்அடைந்தபோதுஎவ்வளவு வியாகுலங்களை அநுபவித்தாள். இவ்விதமாகப்பெற்றபிள்ளைகள் கெட்டழிந்துபோவதை அந்தஇரக்கமுள்ளதாய் பார்த்திருப்பாளா? எத்தனையோபேர் கடவுள்இல்லையென்று தங்கள் மனப்போக்கின்படி சீவிப்பதுபோதாமல் மற்றவர்களையும் தங்கள்மாயவலையில்அகப்படுத்துகிறார்கள் சிலர் கிறீஸ்தவர்களாயிருந்தும் திருச்சபையின்சட்டதிட்டங்களைப் புறக்கணித்துத் தங்கள் இஷ்டம்போல நடந்து கெட்டழிந்துபோகிறார்கள். சிலர் நல்லகத்தோலிக்கராய்இருந்தும் இடையிலே பாவத்தில் விழுந்து கெட்டழிந்துபோகிறார்கள். இப்படியாகப் பாவம்எப்பக்கத்திலும் மலிந்துகுவிந்திருக்கும்போது இரக்கமுள்ளசர்வேஸ்பரன் அளவில்லாத நீதியுள்ளவருமாகையால் இப்பாவஉலகை எப்படித்தண்டிக்கப்போகிறாரோவென்று நமதுஇரக்கமுள்ளதாய் பரிதபிக்கிறாள். சொல்லமுடியாத வியாகுலம் அனுபவிக்கிறாள். எவ்விதமும் நம்மைக் காப்பாற்ற விரும்புகிறாள்.

லூர்துகெபி, பத்திமாமுதலாம் பதிகளில் எத்தனையோமுறை தேவதாயார் காட்சியளித்து மனிதர்களுக்கு வரப்போகும் கேடுகளைப்பற்றி எச்சரித்து, கடவுளின்கோபத்திலிருந்து மக்கள் தப்பித்துக்கொள்ளுதற்கு என்ன என்ன செய்யவேண்டுமென்று அறிவித்துள்ளாள் அல்லவா? செபமாலைசொல்லுங்கள்! செபமாலைசொல்லுங்கள் என்று எத்தனைதரம் மனுக்குலத்துக்கு அறிவித்திருக்கிறாள். எத்தனைபேர் இதற்குச் செவிசாய்த்தார்கள்? பெருந்தொகையானமனிதர் எமது இரக்கமுள்ளதாயின் எச்சரிக்கைகளை அலட்சியஞ்செய்துவிட்டார்கள். கடைசியாக நமதுதிவ்வியஇரட்சகர்தாமே ஷீட் என்றகிராமத்தில் கூறியஎச்சரிக்கையிலே: நமதுதிருத்தாயார் காட்சிகள் கொடுத்து மனுக்குலத்தவர்கள் என்ன செய்யவேண்டுமென்று அவர்களை எச்சரித்திருந்தார்; மனிதர் அவருடைய எச்சரிக்கைகளை அலட்சியஞ்செய்துவிட்டார்கள்;இப்போதுநாமே ஆக்கினைகள்சமீபித்திருக்கும் இந்தக்கடைசிவேளை அவர்களைஎச்சரிக்க வந்திருக்கிறோம்; வரப்போகிறகாலம் படுபயங்கரமானது; மனிதர்இனிமேலாவது தபம்புரியவேண்டும்; தங்கள்பாவங்களை அறவேவெறுத்துத் தள்ளவேண்டும்; அவர்களைத் தண்டிக்கவேண்டுமெனச் சர்வேசுரன் கோபங்கொண்டிருக்கிறார்; அவருடைய நீதியான கோபத்தைச் சாந்திசெய்யவேண்டும். அதற்காகத் தபத்துடனே செபஞ்செய்யவேண்டும்; செபத்தின் மேற்செபம் இடைவிடாது செய்யவேண்டும்; விசேஷமாகத் திருச்செபமாலை அடிக்கடி ஓதவேண்டும்; செபமாலை தேவனிடத்து மகாவல்லமைபெற்ற செபம்; உலகத்தவர்கள் விரும்பிநாடும் இன்பசுகங்களைஎல்லாம் ஒழித்துவிடவேண்டுமெனத் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு தேவதாயாரும், நமது திவ்விய இரட்சகரும் எங்களுக்குக் கொடுத்த எச்சரிக்கைகளை நாங்கள் அலட்சியஞ்செய்யலாமா? இனிமேலாவது தேவதாயாரின் அழைத்தலுக்குக் காதுகொடுப்போமாக. பாவம் நிறைந்த இந்தஉலகைச் சர்வேசுரன் தண்டிக்கஇருக்கிறாரென அறிந்தமாத்[illegible] அதற்குத் தப்பிநடக்க[illegible]வேண்டும். பிறர்சிநேகத்தின் நிமித்தம் நமது அயலாரையும் காப்பாற்ற முன்வரவேண்டும். செபஞ்செய்யுங்கள். தபஞ்செய்யுங்கள். ஊழியஞ்செய்யுங்கள். இவைகளையேமரியாயின் சேனையாளர் புரிந்துவருகிறார்கள்.

### 6-ம் அதிகாரம்

### சேனையின் இலட்சணங்கள்

1. சேனையின் குணாதிசயங்கள்:— மரியாளின் குணாதிசயங்களே சேனையின் குணாதிசயங்கள். மரியாள் ஆழ்ந்த தாழ்ச்சியுடையவள். மட்டற்ற கீழ்ப்படிதலுள்ளவள். வானுலகோரைப் போன்ற இங்கிதமுள்ளவள். இடையறாது செபிப்பவள். எதையும்ஒறுக்கப் பின்வாங்காதவள். அற்பமும் பழுதற்ற கற்புடையவள். சலியாத பொறுமையுடையவள். தெய்வீகஞானமுடையவள். தன்னைமுழுவதும் தத்தஞ்செய்யும் மனோதைரியமுள்ளவள். தேவசிநேகமுள்ளவள். ஒப்பற்றஉத்தம விசுவாசங்கொண்டவள். சேனையானது அவளுடையவிசுவாசத்தையும், தேவசிநேகத்தையும், ஞானத்தையும், பொறுமையையும், ஒறுத்தலையும், செபப்பற்றுதலையும், இங்கிதத்தையும், கீழ்ப்படிதலையும், தாழ்ச்சியையும்அடைய முயற்சிக்கிறது. அவளுடையசிநேகத்தையும், விசுவாசத்தையும் பின்பற்றிச் சகலவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளுகிறது. "முடியாதென்பது அதற்குஒருசாக்காகாது. ஏனெனில், எல்லாம் தன்னால்முடியுமென்றும், செய்யச் சுதந்திரமுண்டென்றும் அதுஎண்ணுகின்றது."

2. அதன்நோக்கம்:— அங்கத்தினரைச் சுத்திகரிப்பதே சேனையின் நோக்கம். அதற்கு அதுஇரண்டுகடமைகளை விதிக்கிறது. ஒன்றுசெபம், மற்றொன்று ஊழியம். அதாவது: "சர்ப்பத்தின் சிரசைநசுக்கிக் கிறீஸ்துவின் இராசரீகத்தைப் பெருக்குவதற்கு மரியாளுடனும், திருச்சபையுடனும் ஞானமேய்ப்பர்களின் ஆதீனத்திற்குட்பட்டு ஒத்துழைக்கும் ஊழியம்."

திருச்சபையின் சேமத்திற்குப் பிரயோசனமானதென்றும், சேனையாளருக்கு இசைந்ததென்றும் தாங்கள் கருதும் சகலவிதமான சமூகசேவைகள், கத்தோலிக்கஊழியங்களுக்குத் தலைமையானசேனையின் (Concilium) கொன்சீலியத்தின் சம்மதம்பெற்றும், சேனைப்புஸ்தகத்தில் கண்டிருக்கும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டும், மேற்றிராணிமார்களும் குருக்களும் மரியாயின் சேனையை உபயோகப்படுத்தலாம். பங்குக்குருவானவர் அல்லது மேற்றிராணிமார் அங்கீகாரமின்றி ஏதேனுமொருபங்கில் இந்தச்சேவைகளிலே ஏதேனுமொன்றில் சேனையாளர் தலையிடமாட்டார்கள்.

3. அதன்மகிமை:—சேனைநிகழ்த்தும் அப்போஸ்தலத்துவத்தின் மகிமையையும், திருச்சபைக்கு அந்தஅப்போஸ்தலத்துவம் ஆற்றும்தொண்டையும் எடுத்துரைக்க, பரிசுத்ததந்தையான 11-ம்பத்திநாதரின் வார்த்தைகளைவிட வேறுதெளிவானவார்த்தைகள் கிடையா. அவைகள் சாமானியமானவையல்ல. அதிகாரம் ததும்பியவை.

அதாவது:—

"சர்வேஸ்பரனது முற்றிலும்விசேஷ அநுக்கிரகத்தினால்இந்தத்தொழிலுக்கு அழைக்கப்பட்டுத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத்தொழிலுக்கும், குருக்களின்தொழிலுக்கும் பாரதூரமான பேதமில்லை. ஏனெனில், கத்தோலிக்கஊழியம் விசுவாசிகளின் அப்போஸ்தலத்துவமேதவிர வேறல்ல. விசுவாசிகள் மேற்றிராணிமார்களைத் தலைவர்களாகக்கொண்டு திருச்சபைக்குத் துணைச்செய்கிறார்கள் ஓர்அளவு ஞானமேய்ப்பர்களின் வேலைகளைப் பூர்த்தியும்செய்கிறார்கள்."

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**1949-ம் ஆண்டு**

மார்கழி மாசம்

| | | |
|---|---|---|
| வெ | 9 | அர்ச். லெயோக்கதியம்மாள். க. வே. |
| சனி | 10 | திருக்குடும்பமனை சம்மனசுகளால் இத்தாலிக்குக்கொண்டு போகப்பட்ட திருநாள் |
| ஞா | 11 | ஆகமனகாலத்தின் 3-ம் ஞாயிறு—அர்ச். தமாசியார், பா: தி |
| திங் | 12 | அர்ச். எப்பிமக்கியார், வே. |
| செ | 13 | அர்ச். பிரகாசியம்மாள், க. வே. |
| புத | 14 | அர்ச். ஸ்பிரிதியோன், மே. |
| வி | 15 | அர்ச். வலேரியான், மே. வே. |

சத்தியவேத

# பாதுகாவலன்

1949-ம் ஆண்டு

மார்கழி மாதம் 8-ந் திகதி

## உணவுச் சங்கடம்

இனிமேல் பஞ்சத்தாலும், பசி பட்டினியாலும் பாதிக்கப்படாததும், தேவையானஎதுவும் இல்லையேயென்றுசொல்ல இடமில்லாததும், யுத்தபயப்பிராந்திக்கு ஏதுவேஇராததுமான புதிய உலகமொன்றை நவமாக ஏற்படுத்தநினைந்தே உயிரைப் பாராது, செலவைப்பாராது தாங்கள் உக்கிரமாகப் போராடுவதாய் யுத்தமநிகழ்ந்த காலத்தில்நேசநாடுகள் நம்பியிருந்தன. ஆனால், யுத்தம்முடிந்து நாலரை வருடங்கள் சென்றபின்னரும் இலங்கைமக்கள் உணவு வரத்துச்சம்பந்தமாய், ஒரு கப்பலில் வந்த அரிசி உண்டுசெலவாகு முன்னரே மறு அரிசிக்கப்பல் இனி வந்துவிடுமா என்று சிந்திக்கவேண்டிய அந்தரநிலையில்தான் ஓரளவில் இருக்கிறார்களெனலாம். யுத்தமமுடிந்து வருடங்கள் செல்லச்செல்ல இங்கே பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் அரிசி, மா ஆதியாம உணவுப்பொருட்களின்விலையும் ஏறிக்கொண்டே போகிறது. அதனால் பணக்கஷ்டம் அதிகரித்துவரும் இக்காலத்திலே சனங்கள் கூடிய விலைகொடுத்து அவற்றைவாங்க வேண்டிய நிர்ப்பந்தம ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையிலே யுத்தம்வராது தடுத்துவைக்க நிச்சயமான வழியாக, சகலதேச மக்களும் தங்களுக்குத் தேவைப்படும் உணவுப்பொருட்களையும், மற்றும்இன்றியமையாத காரியங்களையும் பெற்றுக்கொள்ள உதவிசெய்வதே என்றஉண்மையைப் பராகண்டிதஞ்செய்தல் அபாயமாகுமென்பதைப் போயிட் பிரபு முதலாம் அறிஞர்கள் உணர்வது அதிசயமன்று.

நமதுமக்கள் தங்கள் சொந்தநாட்டு உணவுச்செய்கையிலே தங்கியிருக்கச் செய்யவேண்டுமென்று முதலாவது உலகயுத்தம் நடந்தேறிய காலத்திலே அரசினருக்கும், சனத்தலைவருக்கும் எழுந்த உணர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட உணவுச்செய்கை இயக்கமானது இன்னுமே உற்சாகம் அளிப்பதாயில்லை. இலங்கையின் விளைவு கண்டு மேலதிகமாக எமக்குத் தேவைப்படும். பெருந்தொகையான அரிசியையும், பிற உணவுப்பொருட்களையும் சிலவருட காலத்தில் இங்கே செய்கைபண்ணுவது இயலும் கருமமன்றுதான். ஆனால், நமது அரசினரின் உணவுச்செய்கைஇயக்கம் பதினெட்டுவருடங்களுக்கு முன்னதாக, அதாவது முதலாவது அரசாங்கசபையின் காலத்திலே கமத்தொழில் மந்திரிசபையால் ஆரம்பிக்கப்பட்டதென்பதை நாம் மறந்துவிடலாகாது. இத்தனைவருடங்கள்சென்றும் இங்கு ஏக்கர் ஒன்றுக்கு இன்னும் பதினெட்டுப்புசல்நெல்தானே விளைகின்றது. உலகில் அதிகம் குறைந்த விளைவுகளில் இதுவும் ஒன்றாகும். எமது உள்நாட்டு நெல்விளைவு இவ்விதம் வெற்றியளியாமல் போயின்மையிலிருந்து, "அரிசிவிஷயமாய் இலங்கை தனது சொந்தவிளைவில்தானே தங்கியிருக்கு மென்று ஒருபோதுமே நம்பப்படாது" என உணவுமந்திரியாரும் ஒருமுடிவுக்கு வந்திருக்கின்றார். அரிசிமட்டிலே இத்தகைய அவநம்பிக்கைகொண்ட மந்திரியார் சோளம், சீனிவத்தாளை, பருப்புவகை, பச்சைமரக்கறிவகை ஆதியனவற்றைச் செய்கைபண்ணுவதிலே சனங்கள் அதிகமதிகம் கரிசனை கொள்ளவேண்டுமென ஆசிக்கின்றார். அரசினரையும், சனங்களையும் அறிவூட்டி வழிநடத்துமாறு உணவுப் போஷணசக்தி நிபுணர்கள்சபை ஒன்றையும் நிறுவ எண்ணுகின்றார்.

உணவுமந்திரியார் கொண்டுள்ள கருத்தும், விருப்பும ஓரளவில் சரியென்றே கொள்ளலாம். வருடம் ஒன்றுக்குத் தற்போது இலங்கைக்குத் தேவைப்படும அரிசி 5 லட்சத்து 84 ஆயிரத்து 216 தொன். இதில் உள்நாட்டு விளைவு 1 லட்சத்து 70 ஆயிரம் தொன் மாத்திரமே. நெற்செய்கைக்கென்று அதிகமானகாணிகளை வருடந்தோறும் புதிதாகத் திறந்துகொண்டுபோவதால் அதிகமானநெல்லை விளைவிக்கலாமென்று ஆருமே காத்திருக்கப்படாது. ஆனால், சாஸ்திரமுறைகளை மேற்கொண்டு குறைந்ததொகையான நிலத்தில் கூடியதொகையான நெல்லை விளைவிப்பதால்தான் அரிசிப்பிரச்சினையை ஓரளவில் தீர்க்கலாம். அத்துடன் குரக்கன், சாமி, வரகு, எள்ளு, கிழங்குவகை, பருப்புவகை, மரக்கறிவகை ஆதியவைகளைச் செய்கைபண்ணுவதிலும் ஊக்கமளிக்கப்படுமானல் இலங்கையின் உணவுச்சங்கடத்தை ஒருவாறு சமாளித்துக்கொள்ளலாம். இதற்கும் சனங்களின் இக்காலபழக்கவழக்கங்கள்சில மாற்றப்படவேண்டும். அக்காலத்திலே அத்துணை சுகபலமும், திடகாத்திரமும் உடையவர்களாய் விளங்கிய எம்முன்னோர் ஒருவேளைப் போசனத்திற்கே அரிசியை உபயோகித்தார்கள்என்பதை நாம் மறந்துவிடப்படாது.

❀ சோவியற் அரசின் இரும்புத்திரைநாடுகளில் ஒன்றாகிய ஹங்கேரியிலே நத்தார்ப்பெருநாள் இனிமேல் "பேர் மரப்பெருநா"ளாகக் கொண்டாடப்படவேண்டுமென்று அந்நாட்டிலுள்ள கம்யூனிஸ்தஅரசாங்கம் விதித்திருப்பதாக, "பிஸ்ரம்பிளாற்" எனும் பவேரிய கத்தோலிக்க பத்திரிகைகூறுகின்றது.

# தேவபாலன் பிறப்புக்காதை

(சுவாமிவீரமாமுனிவர் இயற்றிய "தேம்பாவணி"யை ஆதாரமாகக்கொண்டு சுருக்கிஎழுதப்பட்டது.)

பூவுலகத்தோர்கொண்ட துன்பங்கண்டு இரங்கிஅழுதாற்போல ஓயாமல் மழைபொழிந்திருந்தவானம், அத்துன்பம் நீங்குங்காலம் வந்ததென்று இன்பம் அடைந்தாற்போல மாரிநீங்கிச் சூரியனும் தனுராசியிற்செல்லவே நல்விளைவுதரும் காலமாகிய மார்கழிமாதம் பிறந்தது. அப்போது,

..........................கூவெலாம் உறவாய்ப் பாவத்(து)
அல்செயும் சாபம்நீக்க ஆண்டகை மகரஞ்சேர்ந்துள்
எல்செயும் கன்னிநீக்கி இளவலாய் உதித்தல்சொல்வாம்.

கூவெலாம்.........பூமுகம்எங்கும் போரின்றிச் சமாதானமாகிப் பாவத்தினால்வந்த இருளைப்பயக்கும் தேவசாபத்தை நீக்கும்படியாய் ஆண்டவன் ஆசைகொண்டு உள்ளத்தில் தேவகாந்திவீசுகின்ற கன்னித்தாயின் திருஉதாத்தைநீக்கி ஓர்குழந்தையாகப்பிறந்த காதையைச் சொல்லுவாம். அங்ஙனம் கன்னித்தாயின் திருஉதாத்தினின்றும் செங்கெல் விளைந்துதேங்கும் காலமாகிய

.........................................மார்கழி நாள் ஐயைந்(து)
ஆயிரு உலகுமோங்க ஆண்டகை உதித்தல்ஓர்ந்தான்

மார்கழி.........மார்கழிமாதம் 25-ந்தேதியன்று பொன்னுலகும, பூவுலகும் உயர்ச்சியடையும்படியாக ஆண்டவன் மனிதனாய்ப்பிறக்கத் திருவுளத்தில் நினைந்தான். —நினைந்து, பாவத்தால்வந்த தேவசாபம் ஒழியவும், பைசாசங்கள்கொண்ட பழம்பழி அகலவும், கடவுளும்மனிதரும் உறவாகவும்,

............இளவலாய்ப் பிறப்பநாதன்
உழியெலாம் மூனைவற்றெங்கும் ஒருகுடை நிழற்றிற்றன்றே

இளவலாய்.........ஆண்டவனே ஓர் திருக்குழந்தையாய்ப் பிறக்க, பூவுலகமெல்லாம் போர்நீங்கி ஒருஅரசனின்தனிக்குடை எங்கும் நிழலைச்செய்ததென்க. எவ்வாறெனில், அக்காலத்திலே எங்கும் தன்பகைஞர்களை வெற்றிகொண்டு உலகமுழுவதையும் ஒருகுடையின்கீழ் அரசாண்டுவந்தான், 'ஒத்தவியான்' எனும் சேசார்அகுஸ்தீஸ் மன்னன். இவன் நிகரற்றுவிளங்கிய தனது வல்லமையைக்கொண்டு உலகமெல்லாம் தனியே ஒருவனாய் ஆளுகைசெய்த மாட்சிமையால் கர்வமிகுந்து தனதுதேசமெங்கும்

பலமுறை பிரிந்தயாரும் பண்டுறை காணியூர்போய்க் [னே
குலமுறை இறையும்எண்ணும் கொணர்ந்திடப் பணியிட்டா

பலமுறை.........பலதலைமுறையால் ஆங்காங்கு பிரிந்துபோயிருந்த தனது பிரசைகள்சகலரும் தாங்கள் முன்னர்வாழ்ந்த பழையகாணியாட்சியாகிய ஊருக்குச்சென்று தத்தம் குலமுறையும், அரசிறையும், எண்ணிக்கையும் கொண்டுபோய்க்கொடுத்து எழுதிவைக்கும்படி கட்டளைபிறப்பித்தான். இந்தக்கட்டளையைக்கேட்டதே வேதத்திற்கு முதலில்விளங்கும் திலதம் போன்ற சூசைமாதவன் தனதுஉள்ளத்தில் தீயைஊட்டினாற்போலப் பெரிதும் துயர்கொண்டவனாய்க் கடல்சூழ்ந்த பூவுலகநாதனைக் கர்ப்பமாகக் கொண்ட திருக்கன்னிகையைநோக்கிச் சொல்லுவான்: அரசன் உலகம் எங்கும்விடுத்த ஓர்கட்டளை இதுவாகுமன்றோ! அதனால் அவன்விதித்த கட்டளைப்படியே பெத்லகேம்என்னும் பெருமைபொருந்திய

என்னகர்க் கிறையும்எண்ணும் ஈவதற் கேகவேண்டும்
அன்னதற் கடியேன்செய்யும் ஆவதென் றருளிச்சொல்வாய்

என்னகர்க்.........எனது காணியாட்சியாகிய நகருக்குக் கையிறையும், எண்ணிக்கையும் கொடுக்க நான் போகவேண்டும்; இதற்குச் செய்யவேண்டுவதைத் தயைகூர்ந்து சொல்வாயாக என்றுகூறிப் பின்னரும் சாற்றுகின்றான்.

விண்டலம் அகத்துவேந்தர் வேந்தனும உனதுமைந்தன்
மண்டலம் அகத்துத்தோன்றி மனுமகன் பிறப்பநாளாய்
தண்டலை அகத்துவிள்ளும் தாதினும் நொய்தாள்நீயும்
கண்டகம் அகத்தென்னோடு துணைவரக் கருதலாமோ

விண்டலம்.........வானுலகத்து வேந்தர்க்குவேந்தனாகிய உனதுதிருக்குமாரன் பூவுலகில்தோன்றி மனுமகனாகப்பிறக்க நாளாகிவிட்டதே. இத்தருணத்திலே பூந்தோட்டத்தில்மலர்கின்ற பூஇதழினும் நொய்யபாதங்களை உடையவளாகியநீயும் முட்களால்நிறைந்த காட்டுமார்க்கமாய் என்னோடு துணையாகவரக் கருதவுங்கூடுமோ?.........அன்றியும் உன்னைவிட்டு ஒருநிமிஷநேரந்தானும் நான் பிரிந்துபோவேனாகில் அந்தோ! என்னுயிர்தரிக்குமோ? ஆதலால்,

[ஏவல்
முன்னிநான் அடைநோய்நீக்க முதல்வன்கேட் டவன்செய்
பன்னிநான் செய்வதென்னே பகர்தியே என்றான்சூசை

முன்னிநான்.........இதையெல்லாம் நினைந்து நான்கொண்ட துன்பத்தைத்தீர்க்க ஆண்டவனைக்கேட்டு அவன்இடுங்கட்டளையை எனக்குச் சொல்லி நான்செய்யவேண்டியது இன்னதென அறிவிப்பாய்என்றான் சூசை.

வேதவடிவாய்த்தோன்றிய மாதவன் இவற்றைச் சொன்னபோது, பின்னர் நிழகப்போவதைக் கன்னித்தாய் முன்னதாகஅறிந்தபோதிலும் தன் துணைவன்இட்ட கட்டளைக்குப்பணிந்து தனதுதிருக்குமாரனைக்கேட்டு அவர் திருவுளம் இன்னதென்று அறிந்துகொண்டு பின்வருமாறு சொல்லுகின்றாள்.

வேட்பதரும் மணம்மணத்த உயிர்இரண்டும் வேறாகா
வாட்பதரும் நயத்திருவர் மாநகர்க்கே குதுமென்றாள்.

வேட்பதரும்.........விரும்புதற்கரிய திருமணமானது ஒன்றாகப்பந்தித்த எமது இரண்டுஉயிர்களும் பிரிந்துவேறாகாமல் வாடாதஇன்பத்தோடு இருவருமே நமதுமாட்சிமைவாய்ந்த பெத்லகேம்நகர் செல்வோமாக என்றாள். தேன்போலும் இனிமைபொருந்திய இச்சொற்களைச் செவிஅருந்தவே, செழுந்தவத்தோனாகிய மாதவன்சூசை தனதுஉள்ளத்தில் ஓங்கி,

மீன்நிகர்பொற் சிவிகையும்மால் வேழமும்பாய் பரிமாவுநீ
வான்நிகர்பொற் திண்தேரும் வறுமையர்க் கில்லாமையில்த
கான்நிகர் முட்தடத்தேகக் காண்டல்உளம் பொறுப்பரிமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்நிகர்.........நட்சஸ்திரங்களைப்போலும் ஒளிர்ந்த பொற்தண்டிகையும், மதயானையும், பாயுங்குதிரையும், வானத்தைப்போலும் உயர்ந்த வலிமை பொருந்தியதேரும் தரித்திராகிய எமக்குஇல்லாமையால் கானகத்தைப் போலும் முட்கள்அடர்ந்த வழியில் நீவரக்கண்டபோது எனதுஉள்ளம் பொறுக்கமாட்டாதே. என்றாலும் பழமையின்மாட்சிமைவாய்ந்த எமதுநகரில் போய்ச்சேர்ந்தபின் அங்கே சஞ்சரித்திருக்கும் பொன்முடிசூழ்ந்த தாவீது இராசாவினால் பெருமைகொண்ட எங்குலத்தவராகிய இனத்தவர்கள்

வன் மாண்ட அருட்புரிந்து வந்ததுயர் ஆறுமெனத்
தன்மாண்ட உளத்திதுவே சார்பெனத்தான் உணர்ந்தானே

வன்மாண்ட.........மிகுந்த தயையைக்காட்டவே வழியில்வந்த துன்பங்கள் ஆறுமென்று மாட்சிமைபொருந்திய தன்மனதில்நினைந்து இதுவே தகுதியர்மெனத் தேறினன் சூசைமாதவன்.........இதைக்கேட்ட கன்னித்தாய் ஆண்டவன் அடிகளைச் சேராதார்க்குஅன்றிச் சேர்ந்தார்க்கு ஒருதுன் பமும்வராது. ஆதலால் நாமும் அவரது சீர்பாதமே துணையெனக்கொண்டு சென்றால், யாதாமோர்குறையும் நேராதுஎன்றாள். இவ்வாறு அவர்கள் ஞானமுறைபேசிப் பிரயாணப்படுமுன் சுடர்விட்டுஒளிரும் ஆபரணங்களைக் கொண்ட ஓர்பேழையின்சாயலாக அருந்தேவ கருப்பத்தைத்தாங்கிய கன்னிகையானவன் [அவனும்

கோண்(ள்)மின்னு முடிதாழக் கொழுநனைத்தான் தொழ
மாண்மின்னு மனம்வெருவி வணங்கப்பின் பிருவர்தொழும்
தாண்(ள்) மின்னும் மகன்தந்த ஆசியொடு தடங்கொண்டார்.

கோள்மின்று.........நட்சாஸ்திரங்கள்சூழ்ந்து ஒளிர்கின்ற தன்திருச்சிரசைத்தாழ்த்திக் தனது துணைவனைவணங்க, அவனும் மாட்சிமைபொருந்திய தன் மனதில் அஞ்சியவனாய் அவளை வணங்க பின்னர் இவருஞ்சேர்ந்து வணங்குகின்ற திருப்பாதங்கள்விளங்கும திருக்குமாரன்தந்த ஆசீர்வாதத்தோடு பயணமாகப்போயினார்கள். அப்போது,

பிறைபழித்த பொற்பதத்தால் பிறைமிதித்தாள் தனைச்சூழ

பிறைபழித்த...... சந்திரனின்ஒளியைப் பழித்துவிளங்கிய பொற்பாதத்தினால் இளம்பிறைச்சந்திரனைமிதித்த திருக்கன்னிகையைச்சூழ்ந்து......மலையைக்காட்டிலும் வலிமைபொருந்திய தோள்களிலே ஆபரணங்கள்தவழ்ந்து உலாவ, சிவந்தசூரியனின் வடிவிலும் அழகியஉருவத்தைக்காட்டி வரிசை வரிசையாய் வானவர் சூழவணங்கித் துளித்தமழையுமே நிகராகாதவண்ணம் மலர்மாரியை ஆகாயத்தினின்றும் பொழிந்தார்கள். இவ்வாறு திருக்குமாரன் தந்த ஆசீர்வாதத்தோடு, வானவர்சூழவணங்கி மலர்மாரிபொழிந்துநிற்க, பிரயாணமாகி,

கொம்பி னர்குயில் கூவவும் மஞ்ஞைகள்
பம்பி ஆடவும் பைஞ்சிறைத் தேனெடு
தும்பி பாடவும் தூயன நாணவும்
நம்பி மாதொடு நன்னெறிப் போயினன்

கொம்பினர்.........பூங்கொம்புகள்தோறும் குயில்கள்கூவவும், சோலைகள்தோறும் மயில்கள் பொலிந்தாடவும், மலர்கள்தோறும் அழகிய சிறகுகளையுடைய வண்டுகள் தேனைஉண்டு களித்துப்பாடவும், தூய அன்னங்கள் நாணிப் பின்நாடவும் ஆடவரிற்சிறந்த சூசைமாமுனிவன் தன்துணைவியோடு நல்வழிநடந்துபோயினன்.

அப்போது மாலைஅணிந்த மணப்பெண்ணைப்போலும் சோலைகள்தோறும் தருக்களில்மலர்ந்த பூங்கொம்புகள் காட்சியளித்தன. அதாவது,

மாலையாரும் மணமகள் ஆமெனச்
சோலை யார்தருப் பூம்பணைத் தோற்றமே

இந்தக்காட்சியுடன் இரவிலே நட்சஸ்திரங்களைக்காட்டின வானத்தைப் போல சேல்மீன்களையுடைய குளங்கள்தோறும் தேன்துளித்தமலர்கள் விரிந்து காட்சியளித்தன. அதாவது,

மாலை யார்உடு காட்டிய வானெனச்
சேலை யார்பொய்கை தேன்மலர் விள்ளவே

இத்தகையகாட்சிகளைக் கண்ணுற்றபடியே சூசைமாதவனும் திருக்கன்னிகையுமாகிய இருவரும் போனஇடமெல்லாம், சூரியன் உலாவுமிடத்தில் இருள்மறைந்து ஒளி தானேபரவுந்தன்மைபோல் பாவம்ஒழிந்து மன்னுயிர்கள்கொண்ட சிந்தாகுலங்கள்மாறத் தேவஅருள் நிறைவதாயிற்று.

பான் அழாவுழி பாய்இருள் நீத்தொளி
தான் அளாவிய தன்மையின் ஆயினர்
போனவாயில் எலாம்புரை நீத்தருள்
ஆன தாருயிர் ஆகுல மாறவே

(தொடரும்)

## பனைவெல்லமும் சீனியும்

பனைவெல்லங்கொண்டு அதிகலாபம் தரக்கூடிய குடிசைக்கைத்தொழில் ஒன்றைஉண்டுபண்ணும் நோக்கத்துடன் பனைவெல்லத்தைச் சுத்தமான சீனியாக்கும் அரசாங்கதொழிற்சாலை ஒன்றை ஸ்தாபிப்பதுபற்றிக் கைத்தொழில்மந்திரிகாரியாலயம் ஆலோசித்துவருகிறது. வெல்லமாக்கத் தயாரிக்கப்படும் பனங்கள்ளின்விலையை மேற்கொண்டே இதில்சித்திஏற்படவேண்டி இருக்கிறது. பனங்கள்ளின்விலையானது இலாபமளிக்கக்கூடிய சீனியின் விலையிலும் அதிகம்குறைவாய் இருந்தாலன்றி இப்புதியகைத்தொழில் இலாபமளிப்பதாய் இருக்குமெனக் கருதமுடியாதென அறிவிக்கப்படுகிறது.

## ஆசியாவின் 'ஹொலிவூட்'

இலங்கை அதிவிரையிலே ஆசியாவின் ஹொலிவூட்டாக விளங்கப் போகின்றது. ஒருபாஷையிலுள்ள சினிமாப்படத்தை மறுபாஷைகளிலே பெயர்ப்பதற்கென்று நவமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் டிலேன்ஸி முறையைப் பிரயோகித்து இந்தியா, பாகிஸ்தான், பர்மா, சீயம், இந்துசீனா, மலாயா, சீனா, யப்பான் ஆதியநாடுகளுக்கு வேண்டிய சினிமாப்படங்களைப் பெயர்த்துச்செய்ய இலங்கையில் பலஸ்ரூடியோக்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இதற்கெனப் புதியகம்பனிஒன்றும்ஆக்கப்படவிருக்கிறது. இந்தஸ்ரூடியோக்களிலே வருடமொன்றுக்கு 50 லட்சம்அடிநீளமான பில்மைப்பெயர்த்துச் செய்யமுடியுமாம். அதாவது பத்துப்படங்களை ஆறுபாஷைகளில் பெயர்த்துச் செய்யக்கூடுமாம் புதிய முறையைக் கண்டுபிடித்தவரானமேஜர் டிலேன்ஸி அவர்களும், செனற்றர் சிற்றம்பலம் காடினர் அவர்களும் இது விஷயமாய் ஓர்உடன்படிக்கைக்குவந்து [illegible] வருகிறது.

## சிந்தனைப் பொருத்தம்

(ஆசிரியர் :
செபஸ்ரியான் குருஸ், தலைமன்னார்)

டேவிற்றின் சிறியமீசை துடித்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. சாந்தம் குடிகொண்டிருக்கும் அவன்முகத்தில் கோபவெறி படர்ந்தது. கண்கள் நெருப்பைக் கக்கின. செய்வதுஇன்னதென்றே தெரியவில்லை. அதேசமயம் அங்குகிடந்த நீட்டுக்கட்டை அரிசியரித்துக்கொண்டிருந்த அவன்மனைவி சுசீலாவை நோக்கி 'விர்' என்றுபறந்தது. அங்கு நிற்கமனமற்ற டேவிற்றின் கால்கள் போனபடி அதிகதூரம்நடந்தான். அவன்நடையில் விறுவிறுப்புக் காணப்பட்டது. பதின்மூன்றரைரூபாவைப் பக்குவமாய்முடிந்திருந்த அவன் சால்வை காற்றிற்பறந்துகொண்டிருந்தது. அவனதுகோபத்தின் சாயல் மேற்குவானத்தில் செம்மைநிறமாகப் படிந்துகொண்டிருக்கும்போது சூரியனும் அஸ்தமித்துவிட்டது.

* * *

டேவிற் ஒருசாதாரணதொழிலாளி. 30வயதுதானிருக்கும். முறுக்கமைந்த அவனதுகறுத்தமேனியில் கண்ணைக் கவரும் ஒரு மினுமினுப்புஇருந்தது. சுசீலாவைக்கலியாணம்செய்து 3 ஆண்டுகள்தான். ஒருமுறையாவது தன் மனைவி நன்றாகஉடுத்திகொண்டு மற்றைய பெண்களைப்போலக் கோவிலுக்குச்சென்றுவர அவன்கண்டதில்லை. இதற்கெல்லாம் வறுமைதான்காரணம். எப்படியாவது இம்முறை நத்தார்த்திருநாளைக்குத் தன்மனைவி சுசீலாவுக்கு ஒருநல்லசேலைவாங்கிக் கொடுத்துவிடவேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்தான். அதற்காகத் தான்வேலைசெய்யும்எசமானிடம் "எப்படியெண்ணாலும் ஒரு 25 ரூபா இம்முறை திருநாளைக்குப் பார்த்துக்குடுத்திடுங்கோ சாமி" என்று அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருந்தான். எசமான் அதற்கென்ன, அதற்கென்னஎன்று ஏமாற்றிவிட்டுக் கடைசியில் இவ்வளவுதான் உண்டுஎன்று 15 ரூபா கொடுத்தார்.

அன்றுசாயந்தரம் அவன் கடின வேலைசெய்துவிட்டு அந்தப் 15 ரூபாவையும் வாங்கிக்கொண்டு கடைக்குப் போய் ஒருகொத்துஅரிசியும், கறிக்கு ஆகவேண்டிய சமான்களுமாக ஒன்றரைரூபாவுக்குவாங்கிச் சால்வையிற் கட்டிக்கொண்டு மீதிக்காசையும் அதே சால்வைத்தலைப்பில் முடிந்துகொண்டு மண்வெட்டியுடன்களைப்புமேலீட்டால் ஆடிஆடித் தன்வீட்டைநோக்கிசென்றுகொண்டிருந்தான். வந்து தன்மனைவியைச் "சுசீ" என்றுஅழைத்துத் தன் சால்வையைக்கொடுத்து: "இந்தா! எப்புடியாச்சும் நல்லமாதிரி இண்ணிக்குச் சமைச்சுக்க" என்று சொல்லிவிட்டுக் கால்கைஅலம்பச்சென்றான். சுசீலா சாமான்களை எடுத்தாள். சால்வையிற் காசுமுடிந்திருப்பதைஅவதானித்தாள். ஆனால், அவள் காசையெடுக்கவில்லை. தன்கணவன்கொண்டுவந்த அரிசியைப் புடைத்துக் குடத்துநீரில் அரித்துக் கொண்டிருந்தாள். அந்நேரம் கால்கை அலம்பிவந்தடேவிற் தன்சால்வையை எடுத்துத் துடைத்துக்கொண்டு வீட்டு வாசலில் அலுப்போடுவந்திருந்தான். அப்போதுஅவர்களுக்குள் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

டேவிற்: ஏன்சுசீ! நான்உங்கிட்ட ஒருசாமான்கேக்கிறன், நீ இல்லையெண்ணுமற் தாணும்

சுசீலா: அது என்ன?

டேவிற்: இண்ணிக்கு வயலில் ரொம்பவேலை. உடம்பெல்லாம் அசந்து போச்சு. எப்படியாச்சும் ஒருபோத்தல் கள்ளுக்கு......

சுசீலா: ஐயோ! எங்கிட்ட ஒரு சதங்கூட இல்லீங்களே

## தேவை

9-1-50 தொடக்கம் அநுராசபுரம் கன்னியர்மடத்துத் தமிழ்ப் பாடசாலைக்குப் பயிற்றப்படாத 1-ம். 2-ம், 3-ம் வகுப்புத் தராதரப்பத்திரமுள்ள ஆசிரியைகள் தேவை. விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்க.

**The General Manager,**
R. C. Schools,
JAFFNA.

Jaffna, 3-12-49.

## மதுவை விலக்கு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பேற்ற மதுஅரக்கனே துணையென நினைந்து அதைக் கைக்கொள்வதாலும், பெண்மணிகள் பக்குவதசை அடையும் காலங்களில் இனசனரைக்கூப்பிட்டுக் குடிவகைகள் பரிமாறுவதாலும் பணமெல்லாம் அழிந்தொழிந்து, நகைநட்டுக்கள், வீடுவாசல்கள் ஏலத்தில் கூறப்பட்டுப்போகவே, பெண்டுபிள்ளைகள் தெருத்திண்ணையில்குந்திக் குடிக்கக்கஞ்சிக்கும் வழிகாணாது அகதிகள் போல் திரிவதைக்காண யார்தான் சகிப்பர்?

மக்களே! வருங்கால இளைஞர்களே! சென்றகாலத்தைக் கைநெகிழ்ந்து வருங்காலத்தை உத்தேசித்து ஆன்ம நன்மையையும், நீடியஆயுளையும் நினையுங்கள். மகிமையைக் காப்பாற்றவும், மனைவிமக்களை உயர்நிலையில் காத்துவைக்கவும், ஊரை முன்னேற்றவும், வறுமையைப்போக்கவும், கல்வியைப் பெருக்கவும், பணத்தைச்சேமிக்கவும், குமர் குட்டிகளைக் கரையேற்றவும், நகைநட்டுகளைக் கூட்டவும், கொலை, களவு சூதுவாதைக் குறைக்கவும், நீதிநெறியை உயர்த்தவும், ஐக்கியத்தை நிலைக்கச்செய்யவும், ஒற்றுமையை வளர்க்கவும் மதுவினைக் கனவிலும் தொடவேண்டாம்.

## கார் இறக்குமதி

இலங்கையிலே இறக்குமதிக்கட்டுப்பாட்டுஅதிகாரிகள் கார்களுக்குஇறக்குமதிக்கட்டுப்பாடு விதித்தமையாலே இங்கு கார் இறக்குமதிசெய்யும் பிரதானகம்பெனிகள் அடுத்தவருடத்தில் கார்களை இறக்குமதி செய்யமுடியாத நிலைமையில் இருக்கின்றன. அதன் விளைவாக அநேகர் பிழைப்பின்றித் தவிக்கநேர்வதுடன், துறைமுக வருமானமும்குறைந்துவிடுமென்று சொல்லப்படுகிறது. இக்கம்பெனிகள் குறித்த அளவுதொகையை ஏலவே இறக்குமதி செய்துவிட்டமையாலே வருகிற ஆனிமாதம்வரையில் எந்த ஒருகாரையோ அன்றேல் வியாபார மோட்டார்ரதங்களையோ இறக்குமதிசெய்ய முடியாதநிலைமையில் இருக்கின்றன.

## யப்பானிய புடவைகள்

யப்பானிய - இலங்கை வர்த்தக உடன்படிக்கைப்படி, அடுத்தவருடத்திலே இறக்குமதிசெய்வதற்கு இலங்கை எதிர்பார்க்கும் 2 கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியான புடவைகளில் யப்பானிய பட்டு, பருத்திப்புடவைகளும், லோங்குளோத் புடவையும் அடங்கியிருக்கும். யப்பானிலே அடுத்தவருடத்தில் பெருந்தொகையானபுடவைகள் இருக்குமாதலால் இவற்றின்விலை வெகுவாகக் குறையுமென நம்பப்படுகிறது. அடுத்தவருடத்திலே இறக்குமதிசெய்யப்படும் யப்பானிய புடவைகளில் நூற்றுக்கு ஏறக்குறைய 75 விகிதமும் சங்கக்கடைகள் மூலமாகவே விற்பனைசெய்யப்படுமாம்.

டேவிற்: இந்தா சுசீ! எங்கிட்ட் ஒளிக்காதே. உங்கிட்டக்காசு இருக்கெண்ணு தெரிஞ்சுதான்கேட்டன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க வாசகம்

சிலவருடங்களாக அச்சேற்ருது விடப்பட்டிருந்த எங்கள் கத்தோலிக்க வாசகப்புத்தகங்கள் மேற்றிராசன அதிகாரிகளால் நியமிக்கப்பெற்ற ஓர் குருப்பிரசாதியின் மேற்பார்வையின்கீழ் சில தமிழ்வித்துவான்களால் புதிதாகத் தொகுக்கப்பெற்றிருக்கின்றன.

தற்பொழுது பாலர் பகுதி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, 2-ம் வகுப்பு, 3-ம்வகுப்புப்புத்தகங்கள் அச்சேற்றப்பெற்று வெளிவந்துவிட்டனவென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேம். மற்றைய 4-ம், 5-ம் வகுப்புப் புத்தகங்களும் அடுத்துவரும் 1950-ம்ஆண்டின் தொடக்கத்தில் வெளியாகிவிடுமென்று நம்புகின்ருேம்.

மேற்காட்டிய கத்தோலிக்க வாசகப்புத்தகங்கள் எல்லாம் எங்கள்பாடசாலைகளிற் கற்பிக்கப்பட வேண்டுமென்று மகாவந்தனைக்குரிய மேற்றிராணிஆண்டவர் அவர்கள் நிபந்தனையிட்டிருக்கின்ருர்கள்.

கத்தோலிக்க சிறுவர்களுக்கென்றே விசேஷவிதமாக வகுக்கப்பெற்று அச்சேற்றப்பெற்றிருக்கும் இப்புத்தகங்களைத் தாங்களும் மனப்பூர்வமாக வரவேற்று ஆதரிக்கவேண்டுமென்று அன்புடன் வேண்டிநிற்கின்றேம்.

மனேஜர்
அர்ச். சூசையப்பர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

# — நத்தார் - புதுவருட —

## விருந்தினரை மகிழ்விப்பன எவை?

தேகத்துக்கு உறுதியும், வாய்க்குஇனிமையும் கொடுக்கும்
நெய்யில் தயாரித்த மஸ்கோத்து (2 மாத உத்தரவாதமுடையது) 1 ரு. 2-00
தோதோல் (5 நாள்உத்தரவாதமுடையது) 1 ரு. 1-50
4 நாட்களுக்கு முன் 25% முன்பணம்அனுப்பி யாழ்ப்பாணத்திலே கீழ்க்காணும்இடங்களுக்கு ஆடர்செய்யுங்கள்

(1) ஆனந்தபவான், 34, முதலாம் குறுக்குத்தெரு
(2) 116 மெயின் ஸ்றீற்
(3) 116 தேநீர்க்கடை, சென் யேம்ஸ் ஸ்றீற்

## சுதேசவர்த்தமானம்

### ஜே. எஸ். சி. பரீட்சை

யாழ்ப்பாணக்குடாநாட்டிலே ஆங்கில ஜே. எஸ். சி. பரீட்சையை நடத்தி வருவது, வடமாகாண ஆங்கிலஆசிரியர் சங்கமேயாகும். இம்முறை இப்பரீட்சை நடைபெறத் தொடங்குமுன்னரே ஆங்கிலபாஷை, கணிதம், சரித்திரம், பூமிசாஸ்திரம் ஆகிய நான்கு பாடங்களினதும் பரீட்சைவினுப்பத்திரங்கள் களவிலே வெளியாகிவிட்டன. அதனுல் குறித்தபாடங்கள் நான்கிலும் சென்றவாரம் பரீட்சை நடைபெறவில்லை. பின்னர் புதியவினுப்பத்திரங்கள் தயாரிக்கப்பெற்று அப்பாடங்களிலே மாணவர்கள் சென்ற திங்கட்கிழமைமுதல் பரீட்சிக்கப்பட்டார்கள்.

### யாழ்ப்பாண ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணப்பட்டணத்தில் இருந்துவரும் அரசினர் பெரியஆஸ்பத்திரியிலே திருத்தங்கள் செய்தும், புதியகட்டிடங்கள்அமைத்தும் அதனை இக்கால மாதிரியானஒன்ருய் ஆக்கிவைக்க அரசினர் 15 லட்சம்ரூபா அனுமதித்திருக்கின்றனர். ஆஸ்பத்திரிப் பெரியகட்டிடத்திலிருந்து வெளிநோயாளர் பகுதிக்கட்டிடத்தைப்பிரித்து நிற்கும் தெரு மாதிரிப்படத்திலே எடுத்துவிடப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண நகரசங்கம் இந்தத்தெருவை மூடவிருக்கின்றது. அவ்விதம் அது மூடப்படாவிடின் ஆஸ்பத்திரியை விசாலமாக்கும் திட்டம் நிறுத்தப்படுமாம்.

### மகாதேசாதிபதியின் விஜயம்

இலங்கையின் மகாதேசாதிபதியாகிய சோல்பரிப்பிரபு யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யும்போது ஆடம்பரமாக அவரை வரவேற்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன. வரவேற்புக்கொம்மிற்றியின் தலைவராக முடிக்குரிய நியாயவாதியான திரு. ரி. முத்துச்சாமிப்பிள்ளை நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்ருர். இவர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்கின்ற மக்களின்பேரால் ஓர் வந்தனேபசாரப்பத்திரம் படித்துக்கொடுப்பார். திரு. கே. கனகசபைஅவர்கள் தனுதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். பெருந்தொகைப்பணம் சேகரிக்கப்படுமென்றும், அதனுல் வரவேற்பு பெருமிதமாக நடைபெறுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### குழந்தையுடன் கிணற்றில்

காரணவாயிலே வேலு விஸ்வலிங்கம் என்பவர் சென்றசனிக்கிழமை தனது ஒருவயசுக் குழந்தையை கிணற்றில் தூக்கிஎறிந்துவிட்டுப் பின்னர் தானும் அதேகிணற்றில்தானே விழுந்து தற்கொலைசெய்துகொண்டதாகச் செய்தி பரந்துள்ளது. தனது மனைவியுடன் வாக்குவாதப்பட்டுக்கொண்டே அவர் இவ்விதம் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

### மன்னூரும் மழைக்குறைவும்

மன்னூர்ப்பகுதியிலே ஆரம்பத்தில் சிறுக விதைமழைபெய்து கொடுத்தமையாலே கமக்காரர் காலபோகத்துக்கென்று வயல்களைஉழுது நெல் விதைத்திருந்தார்கள். பிறகு மழை பெய்யாததாலே, கட்டுக்கரைக்குளத்திலிருந்து தண்ணீர்கொடுபடாத அநேக வயல்களில் பயிர்கள் கருகிப்போகின்றன. இன்னும் ஓர்வாரத்தில் மழை பெய்யாவிடில் இந்தவயல்களின் கமக்காரர் தங்கள் பயிரைஇழந்து நட்டமடையவேண்டியநிலைமை ஏற்படுமாம். கட்டுக்கரைக்குளமும் தற்போது நாலு அடித்தண்ணீரையே கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. வழமையிலே அதில் தற்போது பன்னிரண்டு அடித்தண்ணீர்வரையில் நிற்கவேண்டுமாம்.

### போக்குவரத்து மந்திரியார்

போக்குவரத்து மந்திரியார் சேர். ஜோண் கொத்தலாவெல அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமைகாலை ஆகாயவிமானத்திலே காங்கேசன் துறைவந்து சேர்ந்து சுன்னுகத்துக்குச் சென்று அங்குள்ள வெட்டுவாய்க்காலையும், பின்னர் நந்தாவில் வெட்டுவாய்க்காலையும் பார்வையிட்டபின் அன்று நிகழ்ந்த யாழ்ப்பாண ஐக்கியதேசிய (யு.என்.பி.) கிளைக்கட்சியின் விசேஷ கூட்டத்திற்குச் சமுகமளித்துப் பேசியபோது: கம்யூனிசத்தால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை எடுத்துக்காட்டி எச்சரிக்கை செய்தார். சுதந்திரலங்காவில் வகுப்பு வேற்றுமை இருக்கமாட்டாதெனக் கூறி, ஐக்கியதேசீயக்கட்சியும் தமிழ்க் காங்கிரஸும் ஒன்றுசேர்ந்துவிட்டன என்பதை மறுக்கலாயினர்.

### நீர்கொழும்பு நகரசங்கம்

புதிதாக ஸ்தாபிக்கப்பெற்ற நீர்கொழும்பு முனிசிப்பல் சங்க தேர்தல் சென்ற சனிக்கிழமை நடந்தேறியது. அதிலே பழைய பட்டினசங்கத்தலைவர் திரு. எஸ். கே. விஜயரட்ணம் அவர்கள் உட்பட முன்னிருந்த பிரதிநிதிகள் நால்வர் தெரியப்பெற்றனர். தேர்தலில் அபேட்சகர்களாய் நின்ற சமசமாஜ கட்சியினர் இருவரும், பொல்ஷெவிக் கட்சியினர் ஒருவரும் யு. என். பி. அபேட்சகர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

### இரகசிய மருந்துமுறைகள்

முறிவுதறிவு வைத்தியசிகிச்சையிலே நிபுணர்களான சிங்கள வைத்தியர்கள் சிலர் சமீபத்திலே புராதன வைத்திய முறைபற்றிய ஆராய்ச்சிக் கொம்மிற்றியைச்சந்தித்துத் "தலைமுறைதலைமுறையாகத் தங்களுக்கு அருளப்பட்டுப் பிறர்அறியப்படாதென்ற பொறுமையுடன் பாதுகாத்துவரும் இரகசியங்களாகத் தங்கள் குடும்பவட்டாரங்களிலேயே இதுகாலவரை அடக்கிவைத்திருக்கின்ற அதிகம் சித்திகரமான மருந்துமுறைகளை" அரசினராலே நியமிக்கப்படும் பொறுப்புவாய்ந்த ஓர் சங்கத்தினிடம் கையளிப்பதற்கும், அதன்மூலம் இலங்கைமக்கள் நன்மையடையச்செய்வதற்கும் தங்கள் மனவிருப்பைத் தெரிவித்திருக்கின்றனர்.

### தேங்காய் ஏற்றுமதி

பிரித்தானியதேசத்துக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்த தேங்காய்களிலே சென்ற வியாழக்கிழமை முன்னொருபோதும் இல்லாதவிதமாக ஆயிரம் 513 ரூபா 71 சதமாக ஏற்றமடையலாயிற்று. இந்த விலைவிகிதத்திலே பிரித்தானியதேசத்துக்கு ஏறக்குறைய இரண்டுலட்சம் தேங்காய் ஏற்றுமதி செய்ய அன்று அனுமதிக்கப்படலாயிற்று. இதற்கு மூன்றுதினங்களின் முன் ஆயிரம்தேங்காய் 491 ரூபா 75 சதமாக விலைப்படலாயிற்று. ஆயிரம் சராசரி விகிதமாய் ஏறக்குறைய 460 ரூபா விலையில் சென்றமாதத்திலே சுமார் 35 லட்சம் தேங்காய்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

### புதிய ஹைகொம்மிஷனர்

பாகிஸ்தான் அரசினிடமாக இலங்கையின் ஹைகொம்மிஷனராகத் தொழில் சமூகசேவா மந்திரியாரான ஜனுப் ரி. பி. ஜயா அவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்ருர். இவரதுபுதிய நியமனத்தால் கொழும்புநகர் மத்திய தொகுதிக்கு ஓர்இடைத்தேர்தலும், புதியமந்திரி ஒருவரின் நியமனமும் நடைபெறவேண்டியிருக்கின்றன.

### சிங்கப்பூர் அரிசி

இந்தமார்கழிமாத இறுதியிலே சிங்கப்பூரிலிருந்து இலங்கை 15,000 தொன் அரிசி பெறவிருக்கிறது. இருப்பிலே குறைந்துகொண்டுவரும் அரிசியைப் பூர்த்திசெய்யக்கூடியதாய் நேரகாலத்துடன் இதுகொழும்புவந்து சேரவிருக்கிறது. தற்போது இலங்கையிலே இருப்பிலுள்ளஅரிசி இந்த மார்கழிமாதம் 29-ந் திகதிவரைக்கும் போதியதாகும். 15,000 தொன் சிங்கப்பூர்அரிசியும் வந்துசேருமிடத்து இருப்புஅரிசி தைமாதம் 15-ந் திகதிவரையில் போதியதாகும். தற்போது இலங்கையிலே மாதம்ஒன்றுக்குச் செலவாகும்அரிசி 32,000 தொன்.

### சாம்பிராச்சிய மகாநாடு

பிரித்தானிய சாம்பிராச்சிய நாடுகளைச்சேர்ந்த பிறதேச காரியமந்திரிமார்களின் மகாநாடு ஒன்று கொழும்பிலே வருகிற தைமாதம் 9-ந் திகதி முதல் 14-ந் திகதிவரையிலே நடைபெறவிருக்கின்றது. இந்திய பிரதமரும், இந்திய பிறதேச காரியமந்திரியாருமான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய பிரதிநிதியாக அதற்குச் சமுகமளிக்கவிருக்கின்ருர். பிரித்தானிய அரசின் பிறதேச காரியமந்திரியாரான திரு. ஏணெஸ்ற் பெவின் அவர்களும், சாம்பிராச்சிய கருமங்களின் மந்திரியாரான திரு. பிலிப் நோயெல்-பேக்கர் அவர்களும் பிரித்தானிய தூதுக்கோஷ்டிக்குத் தலைமைவகித்துவருவார்கள்.

### ஓர் வாழைக்குலையால்

இரத்தினபுரியைச்சேர்ந்த வட்டுக்குறுகலை என்னுங்கிராமத்திலே லீன்சிங்கோ என்பவனும், எம். ஜி. பீரிஸ் என்பவனும் சிநேகிதராயிருந்துவந்தனர். சொரியற்காணிஒன்றிலே இருவரும் கமஞ்செய்துவந்தனர். ஒருநாள் பீரிசின் வாழைக்குலையொன்று திருடப்பட்டுவிட்டது. நீதான் அதைத் திருடினுயென்று இவன் லீன்சிங்கோவில் குற்றஞ்சுமத்தினுன். அதனுல் இருவருக்குமிடையில் சச்சரவுண்டாகவே, லீன்சிங்கோ கோபங்கொண்டு பீரிசை ஓர்கத்தியால் குற்றிக்கொன்றுவிட்டான். இந்தவழக்கு கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைக்கு வந்து எதிரி கைபிழைபாட்டுக் குற்றவாளியாகி ஏழுவருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன்.

### திரிகோணமலை விமானசேவை

இந்த மார்கழிமாம் 9-ந் திகதி வெள்ளிக்கிழமையாகிய நாளைத்தினமுதல் கொழும்பிலிருந்து திரிகோணமலைக்கு வாரந்தோறும் இருமுறை விமானப்பிரயாணசேவைகள் ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றன. இந்தச்சேவைகள் திங்கள், வெள்ளிக்கிழமைகளில் நடந்தேறும். இவ்விருதினங்களிலும் இரத்மலானையிலிருந்து காலை 8.30 மணிக்குப்புறப்படும் விமானம் 9.35 மணிக்குத் திரிகோணமலையைச்சேர்ந்து, பின்னர் அங்கிருந்து 10 மணிக்குப் புறப்பட்டுப் 10.55 மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேரும். பின்னர் இந்தவிமானம் பகல் 11.20 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுப் 12.15 மணிக்குத் திரிகோணமலையைப் போய்ச்சேர்ந்து, பின்னர்அங்கிருந்து 12.40 மணிக்குப் புறப்பட்டு 1 45 மணிக்குத் திரும்ப இரத்மலானை போய்ச்சேரும. கொழும்பிலிருந்து திரிகோணமலைக்குச்சலார் 30 ரூபா. திரிகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 25 ரூபா. திரிகோணமலைக்கு விமானத்தில் பிரயாணஞ்செய்கிறவர்கள் ஒருமணிநேரத்தில் தங்கள் இடங்களைப் போய்ச்சேரலாம். ஆனல், றெயினில் பிரயாணஞ்செய்கிறவர்களுக்குப் 10 மணித்தியாலம், 40 நிமிஷநேரம் செல்லுகின்றது.

❀ பம்பாய்மாகாணத்திலே தேர்தல்களின்போது. இந்திய தேசீய கொடியையோ வன்றேல் கட்சிக்கொடிகளையோஉபயோகிப்பதைப்பம்பாய்அரசாங்கம் விலக்கிவிட்டிருக்கின்றது. தேர்தல்நாட்களிலே ஆவேசம் அதிகரித்துக் கட்சிஎதுவும் தேசீய கொடியை அவமதித்து, அதன் கௌரவத்தைக் குறைத்துவிடமுடியும் என்பதுபற்றியே இந்தவிலக்குச் செய்யப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வு பெற்றுவரும் பூநகரி-துணுக்காய்

இதுவரை பெயரளவில் இருந்து வந்த பூநகரிப்பிரிவும், துணுக்காய்ப் பிரிவும் சுதந்திர இலங்கையில் பிரசித்திபெற்றுவிட்டன. 6,000 மக்கள் வசிக்கும் இந்த இருபிரிவுகளினதும் விஸ்தீரணம் சுமார் 400 சதுரமைல். இது உண்மையில் வன்னிப் பகுதிதான். இருவருடங்களுக்கு முன் இந்தப்பகுதியில் சரியான வீதிகளோ, ஆஸ்பத்திரிகளோ அல்லது தபால் போக்குவரத்து வசதிகளோகிடையா. ஆனால், இன்று முழுப்பகுதியும் ஒரு தேன்கூட்டைப்போல் சுறுசுறுப்பாகவும், சீவகளையுடனும் திகழுகிறது. இப்பகுதியின் சமூக, பொருளாதார நிலைமைகளை விருத்திசெய்வதற்காக அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளே இந்தப்புனர்வாழ்வுக்குக் காரணம்.

### கமத்தொழில் விருத்தி

விவசாயத்துறையைப் பொறுத்தவரையில், விவசாய—காணிமந்திரியாரின் முற்போக்கானகொள்கைக்கிணங்க, கைவிடப்பட்டகாணிகளை விருத்திசெய்யும்திட்டங்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. ஒரு காலத்திலே இந்தப்பகுதியில் செழிப்பான நெற்களனிகள் நிறைந்திருந்தன. யாழ்ப்பாணப் பெரும்பிரிவின் களஞ்சியமென்றும் இது அழைக்கப்பட்டது. வன்னேரிக்குளத்தைச் செப்பனிடுவதற்காக அரசாங்கம் ஏற்கனவே 80,000 ரூபா மான்யம் அளித்திருக்கிறது. இந்தத்திட்டத்தின்கீழ் சுமார் 50 ஏக்கர் காணியைக் கமச்செய்கைக்கும் கொண்டுவரமுடியும். இப்பகுதியில் கமக்காரர் குடியேற்றதிட்டங்களை ஆரம்பிக்குமாறு சாவகச்சேரிப்பிரதிநிதி திரு. வி. குமாரசாமி அவர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கின்றார். இந்தக்குளத்தைப் புனருத்தாரணம் செய்யும்படி இப்பகுதியிலுள்ள மக்கள் கடந்த 50 வருடகாலமாகக் கிளர்ச்சிசெய்து வந்திருக்கிறார்கள். ஆனால், இப்பொழுதுதான் அந்தப் புனருத்தாரணவேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

### குளங்களைப் புதுப்பித்தல்

அக்கராயன் குளத்தைப் புனருத்தாரணம்செய்து, இன்னொரு 1,000 ஏக்கர் காணியைக் கமச்செய்கையின் கீழ் கொண்டுவருவதற்கு அரசாங்கம் திட்டங்களைத் தயாரித்திருக்கிறது. நிகழும் அரசிறைவருடத்தில் இதற்கான ஒரு உபமான்யத்தைக் கோர விவசாய—காணிமந்திரியார் உத்தேசித்திருப்பதாகத்தெரிகிறது. துணுக்காய்ப் பிரிவிலே அரசாங்கம் அநேகபுராதன குளங்களைப் புனருத்தாரணம் செய்திருக்கிறது. 150 வருடங்களுக்கு முன் இப்பகுதியில் சுமார் 6,000 மக்கள் வாழ்ந்துவந்தனர். ஆனால், இப்பொழுது இங்கேவசிக்கும் மக்களின்தொகை 600 பேருக்குக்குறைவாகவேயிருக்கிறது. துணுக்காயிலுள்ள பூமி நெற்செய்கைக்கு உலகத்திலேயே சிறந்ததென்று திரு. பாக்கர் அவர்கள் கூறியிருக்கிறார். துணுக்காய்ப்பகுதி முழுவதுக்கும், மன்னார்ப் பெரும்பிரிவில் ஒருபாகத்துக்கும் நீர்ப்பாய்ச்சல் வசதி அளித்துக்கொண்டிருந்த மிகப் பெரிய குளங்களில் வவுனியாக்குளமும் ஒன்று. துட்டகைமுனுகாலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப்புராதன குளத்தைப் புதுப்பித்தால் வடமாகாணத்தில் பட்டினிப் பிரச்சினையோ, உணவுத்தட்டுப்பாடோ, அல்லது காணிப்பிரச்சினையோ தலைகாட்டாதென்பது திண்ணம். இந்தக்குளம் புதுப்பிக்கப்படுமென்ற நம்பிக்கையில் பெருந்தொகையான மக்கள் காணி கேட்டு ஏற்கனவே விண்ணப்பஞ்செய்திருக்கிறார்கள்.

### 5,000 ஏக்கரில் கரும்புப்பயிர்

5,000 ஏக்கர்காணி கரும்புச் செய்கையின்கீழ் கொண்டுவரப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இங்கு ஓர்சீனித்தொழிற்சாலையை ஆரம்பிக்கக் கைத்தொழில்மந்திரியார் ஏற்கனவே ஒருதிட்டம் தயாரித்துவிட்டார். சுகாதாரத்துறையைப் பொறுத்தவரையில் சுகாதார—ஸ்தலதாபன மந்திரியார் இப்பகுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்துவிட்டதுடன் மலேரியாத்தடை இயக்கத்தையும் தீவிரப்படுத்தியிருக்கிறார். அதனால் பிறப்புவிகிதம் இப்பொழுது விருத்தியடைந்துவருகிறது. மரணவிகிதம் படிப்படியாகக் குறைந்துகொண்டேயிருக்கிறது. சமீபத்திலே துணுக்காயில் ஒருமத்திய சிகிச்சைநிலையம் ஆரம்பிக்கப்பட்டது. வேரவில் என்னுமிடத்தில் ஒரு பிரசவஆஸ்பத்திரியை ஸ்தாபிக்கவும் சுகாதார மந்திரியார் அனுமதியளித்திருக்கிறார். பூநகரியிலே கூடியவிரைவில் ஒரு தகுதியுள்ள டக்றரை (டி. எம். ஓ) நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தற்கால சுகாதார முறைகளையும், அவற்றினால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் பூநகரிமக்களுக்கு எடுத்துரைப்பதற்காகச் சுகாதார இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டுவருகின்றனர். பூநகரியில் தற்போதுள்ள கிராமஆஸ்பத்திரியில் கடமைபார்க்கிறவர்களின் தொகையானது அதிகப்படியாக இன்னொரு அப்போதிக்கரியை நியமித்ததின்மூலம் அதிகரித்திருக்கிறது.

### போக்குவரத்துப் பிரச்சினை

இருபிரிவுகளையும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் மிகப்பெரிய பிரச்சினை என்னவெனில், சரியானபோக்குவரத்து வசதிகள் இல்லாத குறைதான். பரந்தன்—பூநகரித் தெருவைப்பூர்த்திசெய்யும்படி போக்குவரத்து மந்திரியார் உத்தரவிட்டிருக்கிறார். மன்னார்—பூநகரித் தெருவைப்பூர்த்திசெய்தால் மாந்தையிலுள்ள காணிகளைச் கமச்செய்கையின்கீழ் கொண்டுவரமுடியும். அதனால் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையேயுள்ள தூரத்திலும் 50 மைல் குறையும். மாங்குளம்—துணுக்காய்த் தெருவையும் நிர்மாணிக்கத். திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. கட்டப்படும் புதிய றெயில்வே ஸ்டேஷன் காலகதியிலே வன்னிப்பகுதி முழுவதுக்கும் மத்திய றெயில்வே நிலையமாக விளங்குமென்பதில் சந்தேகமில்லை. பிற்போக்கான நிலையிலுள்ள பகுதிகளை விருத்திசெய்வதில்விசேஷசிரத்தையுள்ள தபால்—தந்திமந்திரியார் இந்தப்பகுதியில் தேவையான உபதபாற்கந்தோர்களையும், தபால்பெட்டிகளையும் ஏற்படுத்தப் பெரும் பிரயாசப்பட்டிருக்கிறார். இதுவரை தீபகற்பத்தின் பிரதான பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்த பூநகரி இப்பொழுது பரந்தனிலிருந்து வரும் ஒரு தெலிபோன்சேவைமூலம் இணைக்கப்பட்டு வருகிறது. பூநகரியில் ஏற்கனவே ஒரு கனிஷ்டபாடசாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருடம் முடிவதற்குள் 100 மாணவர் இப்பாடசாலையில் சேர்ந்துவிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. கனிமடத்திலும், மற்ற இடங்களிலும் ஆரம்பப்பாடசாலைகள் அமைக்கப்பட்டுவருகின்றன.


## வேத புத்தகங்கள்

| | |
|---|---|
| அர்ச். கூரேதார்சின்சரித்திரம் | 2-00 |
| ஞானாமிர்த தடாகம் | 2-75 |
| ஞானஉபதேச தடாகம் | 2-75 |
| பிரதானமந்திரங்களின் வியாக்யானம் | 2-25 |
| தேம்பாவணி (3 காண்டம்) | 15-50 |
| திருவருஷம் | 3-75 |
| மாதாவின் மாலை ஆராதனை | 0-25 |

**தாம்ஸ்ரோட்றீகோ அன்சன்ஸ்,**
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.



## நாம் ஆவலுடன் எதிர்பார்க்கும் ❦ கிறிஸ்மஸ் படிண்கைக்கு

கிறிஸ்மஸ் கார்ட்:- ஆங்கிலம், தமிழ், சிங்களம்
டஜன் :- 1/-, 1/50, 2/-, 2/50, 4/-, 4/50, 5/-, 5/50, 6/-, 6/50, 7/-

படங்கள் :- டஜன் -/50, 1/-, 1/20, 1/50, 2/50
நூறு 4/-, 7/-, 10/-. 12/-, 18/-

குடில்படங்கள் :- டஜன் : 2/50, 6/-, 7/-, 7/50, 9/-, 12/-, 15/-, 25/-, 35/-
ஒன்று : -/25, -/60, -/70, -/75, -/90, 1/25, 1/50, 2/50, 3/50.

| | | | 6" | | 8" |
|---|---|---|---|---|---|
| குடில் சுரூபங்கள் :- | 1 செட்டுக்கு | 3 சுரூபம் | 6/- | — | 10/50 |
| | 1 ,, | 4 ,, | 8/50 | — | 15/- |
| | 1 ,, | 6 ,, | 10/50 | — | 17/- |
| | 1 ,, | 8 ,, | 15/- | — | 25/- |
| | 1 ,, | 16 ,, | 30/- | — | 45/- |

12", 16" செட்டுகளும் எங்களிடம் கிடைக்கும்.

கண்கள் கவரும் பொன் வெள்ளி பூசப்பெற்ற பூப்போச்சிகளும் கத்திரிசால்களும் எங்களிடம் கிடைக்கும்.

| | | 4" | 5" | 6" | 7" | 8" | 9" |
|---|---|---|---|---|---|---|---|
| கத்திரிசால் | பித்தளை | 5/50 | 7/- | 8/50 | — | — | — |
| | நிக்கல் | 6/50 | 8/50 | 10/- | — | — | — |
| பூப்போச்சி | பித்தளை | — | 7/50 | 9/- | 11/50 | 16/- | 20/- |
| | நிக்கல் | — | 9/- | 11/- | 14/- | 18/50 | 23/- |

St. Michael's Art Studio,
6, Jampettah Street,
COLOMBO 13.


## பெற்றார்தின விழாவும் வரவு வாரமும்

பருத்தித்துறை, அர்ச். தோமாஸ் றோ. க. பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், வரவுத்தியோகஸ்தரும் கார்த்திகை மீ 23-ந் திகதிமுதல் 25-ந் திகதிவரையிலே காலை 8 மணிதொடக்கம் 10 மணிவரைக்கும் கிராமத்தினுள்சென்று வரவுகீதங்கள் பாடி மாணவரைப் புதிதாய்ச் சேர்த்தும் வராத மாணவர்பலரை வரச்செய்தும், படிப்பில்லாத முதியோர் பலருக்குக் கல்வியின் அவசியத்தைப்பற்றிச் சிறு சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் வரவு வாரத்தைச் சித்திகரமாக நடத்தி முடித்தனர். 24-ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு வண. G. T. பாலசுந்தரம் சுவாமியவர்கள் தலைமையில் விளையாட்டுப்போட்டிகள் நடந்தேறின. பின்னர் பெற்றாரும், பிள்ளைகளும் பாடசாலை மண்டபத்தில் கூடிச் சுவாமியவர்கள் தலைமை வகிக்க, இப்பகுதிச் சுகாதார பரிசோதகர் திரு. C. கனகரத்தினம் அவர்கள் சுகாதாரம்பற்றி ஓர் விரிவான சொற்பொழிவு நிகழ்த்திச் சபையோரை மகிழ்வித்தனர். பின் தலைவர் சுவாமியவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் முடிந்தது. 25-ந் திகதி பிற்பகல் 5 மணியளவில் பெற்றார்தினவிழா பாடசாலை மண்டபத்திலே பிரதம முகாமைக்காரர் அதிவண. G. A. குருசாமி சுவாமியவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெற்றோரும், மாணவரும், பெரியாருமாகத் திரளானோர் சமூகமாயிருந்து விழாவைச் சிறப்பித்தனர். வரவேற்புக் கீதங்கள் முடிந்ததும் தலைவர்சுவாமியவர்கள் எழுந்து தலைமையுரை கூறிப் பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கினர். பின்னர் பருத்தித்துறைப் பட்டினசங்கத்தலைவர் திரு. N. நடராசா அவர்கள் தற்போதைய கல்விநிலைமையை எடுத்துக்காட்டி, இப்பாடசாலை ஓர் ஆங்கிலபாடசாலையாக வேண்டுமெனப் பேசிமுடித்தனர். அதன்மேல் சம்பத்திரிசியார் கல்லூரிப்போசிரியர் P. சவரிமுத்து, M. A. அவர்கள் "கிறீஸ்த பிள்ளைகளும், கல்வியும், என்றவிஷயமாய் மிகவுந் தெளிவாகப் பேசினர். இவரைத்தொடர்ந்து வரவுத்தியோகஸ்தர் திரு. N. அகஸ்ரீன் அவர்கள் "பாடசாலை வரவும் பெற்றோர் [illegible]டமைகளும்" என்னும் விஷயம்பற்றி விரிவாகப் பேசினர். பாடசாலைஅறிக்கை ஆசிரியர் றேமண்ட் அவர்களால் படிக்கப்பட்டது. அதிலே இவ்வருடம் பாடசாலைவரவு முன் எல்லா வருடங்களிலும் மிகக்கூடியதென்றும், இவ்வருடம் இடாப்பு மொத்தம் வரவுவாரத்துடன் 204 ஆகிவிட்டதென்றும், வரவு 198 என்றும், வீதம் 97 என்றும், வரவுவாரத்தில் 10 புதுப்பிள்ளைகள் சேர்க்கப்பட்டனரென்றும் வரவுத்தியோகஸ்தர் தங்களுடன் ஒத்துழைத்துவருவது பாராட்டற்குரியதென்றும் எடுத்துக்காட்டப்பட்டது. வண. G. T. பாலசுந்தரம் சுவாமியவர்கள் எல்லாருக்கும் நன்றி கூறினர். ஈற்றில் பாடசாலை ஆசிரியர்கள் பயிற்றிய ஆடல் பாடல்களையும், ஆங்கில சம்பாஷணைகளையும், நடனம், கும்மி, கோலாட்டங்களையும் கண்டும் கேட்டும் சபையார் மகிழ்ந்தனர். கட்டளைக்குரவர் இந்தவிழாவைச் சிறப்பிப்பதற்குச் செய்தஉதவிகளைப் புகழ்ந்தனர். தேநீர் உபசாரணையுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

— ஓர் மாணவன்

❁ அமெரிக்க ஐக்கியதேசத்திலே கிறிஸ்தோப்பர் இயக்கமென்று ஓர் கத்தோலிக்கஇயக்கம் நவமாக எழுந்திருக்கிறது. இரண்டுலட்சம் அங்கத்தவர்களைக்கொண்ட இந்த இயக்கத்தில் அநேக புரொட்டெஸ்தாந்தரும், யூதர்களும் அடங்கியிருக்கிறார்கள். இது தயாரிக்கவிருக்கும் சன்மார்க்க பிலிம்களிலேமுதல்முப்பதிலும்கீர்த்திவாய்ந்த அநேக நடிகர், நடிகைகள் இலவசமாக நடிக்கமுன்வந்திருக்கிறார்கள்.

உபாத்தியாயர்:— என்ன வில்லி! இந்த வகுப்பிலுள்ள மாணவர்களிலெல்லாம் நீ எழுதின வியாசந்தான் மிகமோசமாயிருக்கிறது. இதைப்பற்றி உனது தகப்பனாருக்கு ஒருகடிதம் எழுதப்போகிறேன்.

வில்லி:— நல்லாய் எழுதுங்கள் சேர். அவர்தானே இதை எழுதித் தந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுவை விலக்கு

( ஆசிரியர்: ஏ. எம். துலாஸ், வங்காலை )

மதுஎன்றால் மஸ்து, மயக்கம்என்று பொருள். மதுபானம் அருந்தும் ஒருவன் இரண்டு சுபாவமுடையவனாகின்றான். தற்சுபாவத்தில் நல்லவனாயினும், இரண்டாம் சுபாவத்தில் பைத்தியகாரனுக்குச் சமானமாகின்றான். மதுவைஅருந்தியவுடனே அன்னவனின் இரத்தமெல்லாம் கொதிகொண்டுநஞ்சாகமாறி, உருக்கொண்ட சந்நதகாரனைப்போல் ஆகின்றான். இதனால்அன்றோ "மது மதியைக்கெடுக்கும்", "குடி குடியைக்கெடுக்கும்" என்று நம்நாட்டார் சாதாரணமாகப் பேசிவருகிறார்கள். "குடிகாரன் பேச்சு விடிஞ்சால்போச்சு" என்பது நாடோடிப்பேச்சு.

சென்றவாரம் அகிலஇலங்கை முழுவதும் அரசினர் மதுவிலக்குவாரமென ஓர்வாரத்தை நவமாய் ஏற்படுத்திக் குடிவெறியின் கொடுமை, மதுவின் அழிமை, மஸ்தின் இழிமை மு[illegible]ய வற்றைச் சனங்களிடையே எடுத்துக் காட்டிப் பற்பலபிரசாரங்கள் செய்துள்ளனர். பழகிய கெட்டபழக்கத்தைக் கைவிடுவதென்றால் முயற்கொம்பாகத்தான் முடியும். என்றாலும் உணர்ச்சி கொண்டபல்லோர் திடமனங்கொண்டு விடஎண்ணியுள்ளார்கள் என்பதை அ[illegible] பெரிதும்ஆனந்தமே. குடிப்ப[illegible] ஆத்துமகேடு, மரியாதைக்கேடு, அறிவுகேடு மட்டுமல்ல; சரீரகேடுகளும் அதிகமுண்டாகும். அதனால் மூளை தடுமாறும். ஈரல்கருகும். கைகால் நரம்புகள் அ[illegible]ரும். பைத்தியமுண்டாகும். த[illegible]த்திரமுண்டாகும். பலவீனமுண்டாகும். இருதயத்துடிப்பு அதிகரிக்கும். தினமும் குடிப்பதினால் தினவெறியர் தங்கள் சொந்த மனைவிமக்களுக்கே தீவினை செய்கிறார்கள். அவர்கள் குடிப்பது வெண்ணிற, பொன்னிறமஸ்து அல்ல. ஆனால், தங்கள் பெண்டு பிள்ளைகளின் செந்நிற இரத்தத்தையேஉறிஞ்சுகிறார்கள். வருங்கால மாணிக்கங்களாகிய புத்திர சிகாமணிகளின் சென்னியில் பொற்கிரீடத்தைஅல்ல, முட்கிரீடத்தையே சூட்டிவைக்கிறார்கள். "காசைக்கொடுத்துக் குத்துமாட்டை வாங்குவதுபோல்" நஞ்சையே உட்கொண்டு நடைதளர்ந்து, உடை அவிழ்ந்து, கான்களில்வீழ்ந்து, அலங்கோல நடனங்கள்ஆடி, பாடல்கள் பாடி, ஊரார்சிரிக்க, உலகோர் பரிகசிக்கத் தாங்கள் செய்வது இன்னது, பேசுவது இன்னதென அறியாது பைத்தியக்காரர்போல் நடந்துகொள்ளுகிறார்கள். அந்தோ! என்னபரிதாபம்!

குடிப்பதினால் நாட்டின் பணம் அழிய, வறுமைஅதிகரிக்க, நம்மக்கள் முன்னேறவழியற்றுத் திண்டாடுகிறார்கள். பெரியஅறிவாளிகளாக வரக்கூடிய எத்தனையோ மாணவமணிகள் அனாதைகள்போல் தவிக்கிறார்கள். குடிக்கும்பழக்கம் நாட்டுக்கு எமன் போன்றது. அதுமக்களின் ஆற்றலைப் பாழாக்குகின்றது. நமது மன்னார், மாதோட்டப்பகுதிகளில் வருடாவருடம் செய்கைபண்ணும்சிறுபோக, பெரும்போக வேளாண்மைகளில் எத்தனையோ புசல்நெல் விளைவிக்கிறார்கள். யுத்தகாலத்தில் இருட்டுச்சந்தைகளில் நெல் புசல் 16, 18 ரூபாவாக விலைப்பட்டது. இப்படியாகவிலைப்பட்டும் எத்தனைபேர் கல்வீடுகள்கட்டியுள்ளார்கள். அல்லது தங்கள் பிள்ளைகளை உயர்தரக்லாசாலைகளுக்கு அனுப்பிப் படிப்பித்துள்ளார்கள். அல்லது வங்கிகளில் பணம் சேமித்துள்ளார்கள். கடலோரவாசிகள் எத்தனையோலட்ச ரூபாக்களுக்கு மீன்பிடிவியாபாரம் செய்தும் சற்றில் தகுந்தபலனை அடையாமல் சிலர்குடிப்பழக்கத்தினால் பணமுழுவதையும் வீணாய்விருதாவாய் அவம்போக்கி விட்டார்கள். இதை எண்ணி இப்போதுதான் மனம்நோகிறார்கள். நொந்தும் என்ன? "இறந்ததற் கிரங்கலால் பயனிலைஅன்றோ!"

இவ்வருடம் மன்னார்ப்பகுதியிலுள்ள மதுபானக்கடைகளால் அரசினருக்குக் கிட்டத்தட்ட ஒருலட்சம் ரூபா ஆதாயம் கிடைத்ததென்றால் நமது மக்களின் குடிப்பெருமைதான் என்னே! கிராமமுன்னேற்ற சங்கந்தான் இருந்தென்ன? சனசமூக சங்கந்தான் கூடியென்ன? இரத்தவியர்வை சிந்தி உழைத்தபணத்தைக் கண்மூடித்தனமாகக் கள்ளுக்கடையில்கொட்டுவதென்றால் யார்தான் மனம்சகிப்பர்? ஆதலால் சற்றேவிழிமின்! முயற்சி எடுமின்! உயர்ச்சி அடைமின்! மதுவை விலக்குமின்! குடியைவிடுமின்! மதுவிலக்கில் சேருமின்! மனைவிமக்களை நினைமின்! ஊரைமுன்னேற்றுமின்! மானத்தைக் காப்பாற்றுமின்! மகிமையை அடைமின்!

நம்நாட்டுமக்களிற்பலர் உழைக்கும் பணத்தை அறியாமைகாரணமாகவோ, யோசனை அற்றவிதத்தாலோ திருவிழாக்காலங்களில் கூடிக்குடிப்பதாலும், கலியாணக்கொண்டாட்டங்களில் பெருந்தொகைப்பணத்தைக் கள்சாராயத்தில் செலவிடுவதாலும், கூத்துநாடகங்கள்போட்டு அவற்றை ஒப்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Gr. No. 112. Eng.

## மாரிகாலத்தில் வெளியே செல்கையில்

மாரிகாலம் வெளியே அதிகமாகச் செல்லுங்காலம். தியேற்றர்கள் ஒவ்வோர்இரவும் காட்சிகாண்பிக்கின்றன. சங்கீதசாலைகள் தெரிந்தெடுத்த சிறந்த சங்கீதங்களைப் பாடவைக்கின்றன. கதம்பக்கச்சேரி மண்டபங்களிலே கீர்த்திவாய்ந்த வாத்தியகாரரும், சங்கீதப்போட்டியாளரும் தோற்றமளிக்கின்றார்கள். களியாட்டகோஷ்டிகளும் தினமும் கிரமமாகக் கூடிவருகின்றன.

இவைகளையெல்லாம் கண்டுகளிக்க விரும்புகின்ற சனங்கள் மத்தியில் திரு. ஜோண்ஸ் அவர்களும், இவர் பாரியாரும் சாயந்தரவேளையிற் சென்று அதிகநேரதைப் போக்குகின்றார்கள். அன்றொருநாள் களியாட்டகோஷ்டி ஒன்றுக்குச் சமூகமளிக்கும்படி திரும்பவும் கேட்கப்பட்டார்கள். இது எப்போது வருமென்று நெடுநாளாய் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாக அந்தச் சாயங்காலவேளை வந்தது. அந்தவேளை குளிராயிருந்ததுடன் சிறுகமழை பெய்துகொண்டுமிருந்தது. அப்போது மனத்துக்கு வெறுப்பைத்தரும் துளிமழை சீதோஷ்ணநிலையை மேலும் விரும்பத்தகாததாய் ஆக்கிவிட்டது. அப்போது திரு. ஜோண்ஸ்அவர்களும், பாரியாரும் வெப்பமான தங்கள் அறைக்குவெளியே வந்தார்கள். வாடகைக்கார் காத்துநின்ற இடத்துக்குத் தெருவைக்கடந்து சென்றார்கள். மேலங்கிதரித்திருந்தபோதும் அவர்கள் குளிரால் நடுங்கினார்கள். ஆயினும் களியாட்டமண்டபத்திலே வெப்பமாயும், உவப்பாயும் இருந்தது. பிந்தச்சீதோஷ்ணநிலை வெகுவாக அதிகரித்தது. சாயங்காலவேளைமுடிவிலே சந்தோஷத்தினால் அலுத்துக்களைத்து, நடனத்தினால் மனக்கிளர்ச்சியுற்று எல்லோரும் வீட்டுக்குச் சென்றார்கள். களியாட்டகோஷ்டி முடிவிலே வழமையாக நடைபெறுவதுபோல் விருந்தாடிகள் வாடகைக்கார் வருகிறவரையில் சிறிதுவேளை காத்திருக்க வேண்டியோரானார்கள். பின்னர் திரும்பவும் எல்லோருமே குளிரினால் நடுங்கத் தொடங்கினார்கள். விசேஷமாகப் பெண்மணிகள் அத்துணை அதிகம் வெப்பத்தை அளிக்க முடியாதனவாய் மாலைவேளைகளில் அணிந்துகொள்ளும் மெல்லியவஸ்திரங்களைத் தரித்திருந்தமையால் அதிகமாக நடுங்கினார்கள்.

மறுநாட்காலை, ஸ்ரீமதி. ஜோண்ஸ் படுக்கையைவிட்டெழுவிரும்பியபோது தலைச்சுழற்சிஉண்டாய்த் தனது ஓர் காலை நிலத்திலேவைக்க முடியாதவளானாள். அப்போது அவளுக்குத் தும்மத்தொடங்கியது. அன்றுதினமும், அடுத்ததினங்களிலும் தனது கண்டத்தைச்சுற்றித் தடித்த ஓர்கழுத்துப்பட்டியுடன் படுக்கையிலேயே கிடந்துகொண்டாள். அவளுக்குக் கடுமையான சலதோஷம் உண்டாயிற்று. அவளிலிருந்து கணவருக்கும் அது தொற்றிக்கொண்டது. ஆனால், அவள்சற்றேகுணமடைந்தபோது அவர் கம்பளியால் போர்த்துக்கொண்டே படுத்துக்கிடக்க வேண்டியவரானார். அவருக்குண்டான சலதோஷம் எவ்வளவோ அதிகம் அவருக்குப்பெரிய சங்கடத்தை உண்டுபண்ணியதால் வாரக்கணக்கிலே வீட்டில் தங்கியிருக்க வேண்டியவரானார்.

## மதித்தற்கரிய கொடையின் நஷ்டம்

### கண்பார்வை குன்றுவதே

வயது போகப்போக, அதாவது ஏறக்குறைய 40 வயசில், அல்லது சிலவேளை அதற்குமுன்தானும் சாமானிய கண்கள் பார்வையில் குன்றும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதுவரை அதிகம் நெகிழ்ந்து உறளத்தக்கனவாயிருந்த கண்ணின் ஒளிவட்டங்கள் இப்போது கடினமும், விறைத்தனவும் ஆகின்றன. இது முற்றும் இயற்கையான மாற்றமே. இதிலே விளைவதென்ன? கண்ணின் தசைநார்கள் ஒளிவட்டங்களிலே சரியாகக் கருமம் ஆற்றத் தவறுகின்றன. அப்போது இந்த ஒளிவட்டங்கள் பல்வேறு தூரங்களுக்குப் பார்வையைச் செலுத்த இடங்கொடுக்க முடியாதனவாகும். அதனால் கண்களிலிருந்து அதிக தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஓர்சார்பும், அதிகம் பிரபையான வெளிச்சம் வேண்டுமென்ற விருப்பும் உண்டாகின்றன. எழுத்துகள் களங்கமுற்று ஒன்று மற்றொன்றினுள் சொருகுகின்றன. பகலில் விசேஷமாய்ச் செயற்கை வெளிச்சத்தில் வாசித்தபின் கண்கள் களைகொள்ளுகின்றன. பின்னர் தலையிடி உண்டாகிறது. அநேகமுறைகளில் பார்வைத்தூரம்முற்றும்நன்றாயிருக்கிறது. ஆனால் சமீபவேலைக்கு உதவாதிருக்கிறது.

கண்பார்வையைப் பரிசோதிப்பதிலும், தகுதியான மூக்குக் கண்ணாடிகளைத் தெரிவுசெய்து கொள்வதிலும் நமக்குள்ள அனுபவத்தை உமக்கு முற்றாகக் கையளிக்கிறோம். இக்காலமாதிரியான புத்தப்புதிய கருவிகளெல்லாம் இதுவிஷயமாய் நம்மிடம் கிடைக்கக் கூடியனவாய் இருக்கின்றன.

நல்ல கண்பார்வையுடையவர்கள் மூக்குக்கண்ணாடிகள் போட வேண்டியதில்லை. ஆனால் இவர்களின் நட்பும், ஆதரவும் ஒரு மூக்குக்கண்ணாடியை விற்பதிலும் எவ்வளவோ கூடிய மதிப்புள்ளன. உமது கண்களில் பழுது காணும்போதுதான் நமது வியாபாரதலத்துக்கு வரும்படி அழைக்கிறோம்.

பத்திரூஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## உமது உணவை மென்று அருந்துக

உமதுபற்கள் உமக்குஅழகையும், வசீகரத்தையும் மாத்திரம் தருவன அல்ல. ஆனால், உமது உணவை நன்றாய்மென்று அருந்தவும் உதவுகின்றன. இது நீர் உண்பதை நன்கு சீரணிக்கச் செய்வதில் இன்றியமையாத ஓர் காரியமாகும்.

தூரதிஷ்டவதமாய் உமது இயற்கைப் பற்களை நீர் இழந்துபோய் விட்டீரானால், இனி நீர் செய்யக்கூடிய சிறந்த காரியம், செயற்கைப் பல்கட்டும் ஓர்பல் வைத்தியரை நாடிப்போக வேண்டியதுதான்.

நல்லஉறுதியும், நன்றாகநின்று பிடிக்கக் கூடியதுமாய்ச் செயற்கைப்பற்களுக்கு இணையானபிரபையுள்ள அதிகம் புதிய வஸ்தைக்கொண்டு செயற்கையான வரிசைப் பற்களை நாம்செய்து உதவிவருகின்றோம். இவ்வாறு பற்களை அமைக்கும் முறையானது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதிகம் புதிய முறையாகும்.

தயவுசெய்து ஓர்தரம் நம்மைச் சந்தித்து ஆலோசனை கேட்பீராக! இதற்கு நீர் எவ்வித உபகாரமும் செய்யவேண்டியதில்லை. நாம்செய்யும் ஒவ்வோர்பணிக்கும் உத்தரவாதம் அளிக்கின்றோம். எப்போதும் திருப்திப்பட்டு செல்லும் ஆயிரக்கணக்கான வாடிக்கைகாரரே நமது சிறந்த பிரசித்தகாரர்கள்.

பத்திரூஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், அர்ச். அந்தோனியார், தேவமாதாவின் மன்றாட்டாலும், சங். அல்போன்சா சகோதரியின் வேண்டுதலாலும் நான் கேட்டகாரியங்கள் நிறைவேறினதற்காக நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

மாத்தளை

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எங்கள் மருதமடுச் செபமாலைத்தாயாரின் தயாளம்நிறைந்த சிபாரிசினாலே யான் விண்ணப்பித்த மன்றாட்டுக்கள் கிடைக்கப்பெற்றதற்காக என்முழு இருதயத்தோடும் நன்றிசெலுத்துகிறேன். அத்துடன் புதுமை வரங்கள்நிறைந்த பதுவைப்பதியராகிய அர்ச். அந்தோனியாருக்கும் என் நன்றியறிதல் உரியதாகுக.

P. Charles Antony
No. 9, Press Road,
Jaffna.

## நன்றியறிந்தஸ்தோத்திரம்

நான் அர்ச். ஆரோக்கியநாதரிடமும், சகல ஆத்துமாக்களிடமும் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் T.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street Jaffna, on Thursday, December 8 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org